விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 248 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 07 வெள்ளிக்கிழமை (23.08.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



தமிழர்களின் நினைவுகூரலை

## நீங்கள் தடுக்கலாம் நாங்கள் தடுக்க முடியாது

### இலங்கைக்கு கனடா காட்டம்

(கொழும்பு)

கனடாவில் நிர்மாணிக்கப்பட்டு வரும், தமிழ் இனப் படுகொலை நினைவிடத்திற்கான கட்டுமானப் பணிகள் தொடர்பில் இலங்கையின் நடவடிக்கைகள் ஏற்றுக்கொள்ளக் கூடியவை அல்ல என கனடாவின் பிரம்டன் நகர முதல்வர் பேட்ரிக் பிரவுன் தெரிவித்துள்ளார். ▷02

## அதிகாரப் பகிர்வு, பொறுப்புக்கூறல் புதிய ஜனாதிபதி முன்னெடுக்க வேண்டும்


### ஐ.நா மனித உரிமை ஆணையம் அறிவுறுத்தல்



(கொழும்பு)

இலங்கையின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுபவர் அரசியல் அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பதற்கும், பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் என்பனவற்றை மேம்படுத்துவதற்கும் தேவையான அடிப்படையான அரசியல் யாப்பு மற்றும் நிறுவன ரீதியான சீர்திருத்தங்களை முன்னெடுக்க வேண்டும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் வேண்டுகோள் விடுத்துள்ளது. ▷15

## ஜனாதிபதி வேட்பாளர் இலியாஸ் காலமானார்



▷15

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தாதது அடிப்படை உரிமை மீறல்

## விரைவாகத் தேர்தலை நடத்த வேண்டும் உயர் நீதிமன்றம் நேற்று அதிரடித் தீர்ப்பு

(கொழும்பு)

**உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிற்போடப்பட்டதனால் நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன. நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதற்குப் பொறுப்புக்கூற வேண்டும் என உயர் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்துள்ளது.**

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் கடந்த வருடம் மார்ச் மாதத்தில் நடத்துவதற்கான சகல ஏற்பாடுகளையும் தேர்தல்கள் ஆணைக்குழு பூர்த்தி செய்திருந்தது. எனினும் நிதி அமைச்சினால் உரிய நேரத்தில் நிதி ஒதுக்கப்படாமையாலும் தேர்தல்கள் ஆணைக் குழுவின் உறுப்பினராக இருந்த திருமதி பி.எஸ்.எம் சார்ள்ஸ் சடுதியாகப் பதவி விலகியமை உள்ளிட்ட காரணங்களினாலும் தேர்தலை நடத்த முடியாது போனது. ▷15

## தொடர் காய்ச்சல் குழந்தை பலி


(யாழ்ப்பாணம்)

காய்ச்சல் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஒருவயதுப் பெண் குழந்தை நேற்று முன்தினம் (21) உயிரிழந்துள்ளது.

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த பிரேம ▷15

## தேர்தலை விட மக்களுக்கே அதிக முக்கியத்துவமளித்தேன்

### ஜனாதிபதி ரணில் விளக்கம்



(மஹரகம)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டமை அடிப்படை உரிமை மீறல் என உயர் நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்துள்ள நிலையில், அது குறித்து தான் கவலை கொள்ளவில்லை எனவும் நாட்டு மக்களின் பொருளா ▷15

உயர் நீதிமன்றத் தீர்ப்பு

## தேர்தல்கள் ஆணைக்குழுவின் அதிகாரத்தை வலுப்படுத்தும்

### தேர்தல்கள் ஆணையாளர் கருத்து




(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத்தேர்தல் ஒத்திவைப்புத் தொடர்பான உயர் நீதிமன்றத் தீர்ப்பை தேர்தல்கள் ஆணைக்குழு ஏற்றுக் கொள்வதாக தேர்தல்கள் ஆணையாளர் ▷15

## தமிழர்கள் தம்மை தாம் ஆள்வதற்கு சுயநிர்ணய உரிமையே தேவை

### ஜனாதிபதி வேட்பாளர் சிறிதுங்க ஜெயசூரிய



(கொழும்பு)

"தேசிய இனப்பிரச்சினைக்கு அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் போதுமான தீர்வாக அமையாது. தமிழ் மக்களுக்குத் தம்மைத் தாமே ஆளக்கூடிய சுயநிர்ணய அடிப்படையிலான தீர்வு மிகவும் அவசியம்" என ஐக்கிய சோச்லிசக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சிறிதுங்க ஜெயசூரிய தெரிவித்தார். ▷15

கட்சியின் முடிவு எதுவாகினும்

## எனது ஆதரவு ■ ■ ■ அரியநேந்திரனுக்கே

### சிறீதரன் எம்.பி பகிரங்கம்



(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில்தமிழ்ப் பொது வேட்பாளர் அரிய ▷16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரசு சுட்டும் வேட்பாளருக்கே தமிழ் மக்களின் வாக்குகள்

## சுமந்திரன் எம்.பி நம்பிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழரசுக்கட்சி பரிந்துரைக்கும் வேட்பாளருக்கே தமிழ் மக்கள் வாக்களிப்பர் என பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இது குறித்து மேலும் கருத்துரைத்த அவர்,

கடந்த மூன்று ஜனாதிபதித் தேர்தல்களிலும் இறுதிக் கட்டத்திலேயே ஜனாதிபதி வேட்பாளருக்கான ஆதரவு தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சி அறிவித்தது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆதரவு வழங்குமாறு கோரும் ஜனாதிபதி வேட்பாளர்களுக்கே, தமிழ் மக்கள் வாக்களிப்பர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.(ந-7)

## நீங்கள்...

இது குறித்து அந்நாட்டு வெளிவிவகார அமைச்சருக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், இலங்கைக்கு எதிராக கடுமையான நிலைப்பாட்டை எடுக்குமாறு வலியுறுத்தியுள்ளார்.


முன்னதாக, பிரம்டன் நகரில் நிர்மாணிக்கப்படும் குறித்த நினைவுச் சின்னத்திற்கு இலங்கையின் எதிர்ப்பைத் தெரிவித்து, இலங்கைத் தூதரக அதிகாரி துஷார ரொட்ரிகோ, நகர முதல்வருக்கு கடிதம் எழுதியிருந்தார்.

அத்துடன், இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரியும் கனேடிய உயர்ஸ்தானிகரை அழைத்து இலங்கையின் எதிர்ப்பைப் பதிவு செய்திருந்தார்.

இந்நிலையில், இலங்கையின் தீர்மானங்களை புறக்கணிக்க பிரம்டன் நகரசபை அதிகாரிகள் தீர்மானித்துள்ளதாக முதல்வர் பேட்ரிக் பிரவுன் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

“இலங்கையில், தமிழ் சமூகம் தங்கள் அன்புக்குரியவர்கள் மற்றும் மாவீரர்களை நினைவுகூருவதைத் தடுக்க இலங்கை அரசாங்கம் முயற்சி செய்யலாம். ஆனால் கனடாவில் அதைச் செய்ய முடியாது.

கனடாவில் நினைவேந்தல் நிகழ்வுகளைத் தடுக்க முயல்வது உள்நாட்டு விவகாரங்களில் தலையீடு செய்யும் செயல் என்று அவர் தனது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ந-7)



நல்லூர்க் கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்த மகோற்சவந்தனில் 14 ஆம் நாளான நேற்று நல்லூர்க் கந்தப்பெருமானுக்கு சர்ப்ப வாகனசேவை இடம்பெற்றது.

மாலை விசேட வசந்த மண்டப பூஜைகளைத் தொடர்ந்து கந்தவேற்பெருமான் கஜவல்லி, மகாவல்லி தேவியர் சகிதம் சர்ப்ப வாகனத்தில் வலம் வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

# பொலிகண்டி முதல் பொத்துவில் வரை

## அரியநேந்திரன் பிரசாரம்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளராகக் களமிறங்கியுள்ள அரியநேந்திரன் இன்று முதல் பொலிகண்டி தொடக்கம் பொத்துவில் வரை தனது பிரசாரத்தினை ஆரம்பிக்கவுள்ளார்.


இப் பிரசாரத்தின் முதற்கட்டமாக இன்று காலை 10 மணியளவில் பொலிகண்டியில் பிரசாரத்தை ஆரம்பித்து கரையோர வீதியூடாக காங்கேசன்துறையை அடையத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ந-7)

# கெஹலியவிற்கு மறியல் நீடிப்பு

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல உள்ளிட்ட நான்கு பேர் எதிர்வரும் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தரமற்ற மனித இம்யூனோகுளோபுலின் ஊசி மருந்துகளை கொள்வனவு செய்தமை தொடர்பான வழக்கு நேற்று மாளிகாகந்த நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இவ்வாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (ந-7)


# ஓராண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில்
08 . 09 . 1965

இறைவனின் திருவடியில்
23 . 08 . 2023

## அமரர் சின்னையா அருள்

ஆண்டு ஒன்று முடிந்ததுவோ உங்கள்
அன்பு முகம் நீங்கிச் சென்று
ஆனாலும் எம் மனமோ இன்னும் ஆறவில்லை
காலங்கள் பல கடந்தாலும்
நீங்கள் என்றும் எம் மனதில்
காவியமாய் இருப்பீர்கள்

உங்களது ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டி நிற்கும்

சகோதரி, சகோதரர்கள், மைத்துனர்,
பெறாமக்கள் மற்றும் உறவினர்கள்

(C-1033)



# குத்தகைக்கு வழங்குதல்

வரைவுள்ள கரும்பு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம், ஆனைவிழுந்தான் குளம், கிளிநொச்சி.

பதிவு இல : N/21 பதிவுத் திகதி : 2019.10.21

வரைவுள்ள கரும்பு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமானதும் அதன் ஆளுகையில் உள்ளதுமான 1 ஏக்கர் காணி உற்பத்தித் தொழிற்சாலைக் கட்டடம், இயந்திரங்கள், தளபாடங்கள் ஆகியன குத்தகைக்கு வழங்கப்படவுள்ளது. தகைமை உடையோர் தங்கள் விண்ணப்பங்களை **தலைவர், கரும்பு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம், ஆனைவிழுந்தான் குளம்,** கிளிநொச்சி எனும் முகவரிக்கு 05.09.2024 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகைமைகள் :**

**விண்ணப்பம் செய்ய விரும்புவோர்**

1. கிளிநொச்சி மாவட்டத்தில் நிரந்தமாக வசித்து வருபவராக இருத்தல் வேண்டும்.
2. கரும்பு மற்றும் கரும்பு சார் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தி விற்பனைச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருபவராக இருத்தல் வேண்டும்.
3. உற்பத்தி செயற்பாட்டிற்காக தொழிற்சாலைக்குள் கொண்டு வரப்படும் 1Kg கரும்புக்கு ரூபா 1.00 வீதம் தரகுப்பணம் செலுத்த வேண்டும்.
4. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் ரூபா 01 மில்லியன் வங்கி உத்தரவாதப் பத்திரம் சமர்ப்பிக்கத் தயாராக இருத்தல் வேண்டும்.
5. குத்தகைக்கு வழங்குவது தொடர்பான சங்க இயக்குனர் சபையின் தீர்மானமே இறுதியானதும் முடிவானதுமாகும்.



**குறிப்பு:**

தொழிற்சாலையைப் பார்வையிடுவதற்கான ஏற்பாடுகள் 26.08.2024 திங்கட்கிழமை தொடக்கம் 30.08.2024 வெள்ளிக்கிழமை வரை செய்யப்பட்டுள்ளன. தொலைபேசி **(077 470 2993, 077 326 9387)** இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு தொழிற்சாலையைப் பார்வையிட முடியும்.

**தலைவர்,**
**வரைவுள்ள கரும்பு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்,**
**ஆனைவிழுந்தான்குளம்,**
**கிளிநொச்சி.**
**23.08.2024**

(C-1034)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வித்தகபுரம்-பொற்கலத்தம்பை
# செல்லப்பா செல்லக்குட்டி சாமியார் சிவாலயம்
# விசாலாட்சி அம்பிகை சமேத அம்பலவாணேஸ்வரர் ஆலயம்
# பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம்

## ஆசியுரை

வலிகாமம் வடக்கு பிரதேசத்திலே வித்தக புரத்தில் அமைந்துள்ள நற்பூமியான பொற்கலந் தம்பையில் எழுந்தருளியிருக்கும் விசாலாட்சி அம்பிகை சமேத அம்பலவாணேஸ்வரருக்கு மஹா கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது.

இவ் ஆலயமானது பல்லாண்டு காலமாக கைவிடப்பட்டு இருந்த பொற்கலந்தம்பை செல்லப்பா சித்தரின் மடாலயத்தின் வழித்தோன்றல் ஆகும்.

இன்று பல்வேறு நிர்மாணப் பணிகள் இடம் பெற்று பேரழகுடனும் பொலிவுடனும் அம்பல வாணேஸ்வரர் ஆலயமாகக் காட்சி அளிக்கின்றது.

இவ் மஹாகும்பாபிஷேகப் பெருவிழா சிறப்புற நடைபெறவும் ஆலய உபயகாரர்கள் மற்றும் ஊர் மக்கள் எல்லா நன்மைகளும் பெற்று சிறப்புடன் வாழ்வதற்கு எல்லாம் வல்ல ஆனைவிழுந்தான் விக்ன விநாயகரின் திருப்பாதங்களைப் பிரார்த்தித்து அருளாசி வேண்டுகின்றேன்.

**சிவஸ்ரீ. இராம. பாலச்சந்திரக் குருக்கள், "சிவாகம கிரியா தத்துவநிதி",**
**(ஆதீன குரு ஆனைவிழுந்தான் விக்ன விநாயகர் தேவஸ்தானம்).**

## மாவை ஆதீனத்தின் ஆசிச் செய்தி

செல்லப்பாக்குட்டி சுவாமி ஒரு சீலன் முத்தார் இவர்கள் எந்நேரமும் சிவனை சிந்தித்துக் கொண்டிருப்பார்கள். நன்மை, தீமை எது வந்தாலும் தாமரை இலையில் நீர் போல் இருப்பார்கள். இவர்கள் சித்துக்கள் செய்ய மாட்டார்கள். இவர் மாவைக்கந்தன் பக்தராவார். இவரைப் பற்றி எனது தந்தை மூலமாகத் தான் சான்றுகள் கிடைத்தன. இவர்கள் சமாதி கட்டுவதற்கு எனது தந்தை ஒரு காரணமாகும். இவரின் சமாதி வரும் ஆவணி மாதம் 23 ஆம் திகதி குடமுழுக்கு நிகழ்வதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். மாவைக்கந்தன் அருளால் எல்லாம் மங்களகரமாக நிகழ்ந்து எல்லாப் பேறுகளையும் பெற்று உய்யுமாறு ஆசி கூறுகின்றேன்.

**மஹாராஜஸ்ரீ து.ஷ.இரத்தினசபாபதிக் குருக்கள்,**
**ஆதீனகர்த்தா-பிரதம குரு, மாவை ஆதீனம், மாவிட்டபுரம் ஸ்ரீகந்தசுவாமி கோவில்.**

## வாழ்த்துச் செய்தி

இன்று 23.08.2024 இல் விழி சிட்டியில், செல்லக்குட்டிச் சித்தரின் சமாதி ஆலயம் திருமுழுக்குக் காணும் சந்தர்ப்பத்தில் இந்த வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மகிழ்கிறேன்.

"சித் " என்பது அறிவு. அறிவை உடையவர்கள் சித்தர்கள், நிலைத்திருக்கும் பேரறிவு படைத்த நிறைமொழி மாந்தர், அகத்திய முனிவர் சித்தர்களில் முதன்மையானவராகக் கருதப்படுகிறார்.

இந்த உலகும் வாழ்வும், சிற்றின்பங்களும் பொய்யானவை என்பதைத் தெளிந்தவர்கள் அவர்கள்.

**வெட்ட வெளி தன்னை மெய்யென்று இருப் போர்க்குப் பட்டயம் ஏதுக்கடி - குதம்பாய் பட்டயம் ஏதுக்கடி ?**

என்று பாடுவார் குதம்பைச் சித்தர்.

விழிசிட்டியில் வாழ்ந்த தாமர் சின்னத்தம்பிக்கும் சின்னாச்சிப்பிள்ளைக்கும் பிறந்த மூன்றாவது மகன். செல்லக்குட்டி, சீனியர் என்று இரு தமையன்மாரும் பொன்னம்பலம், வைத்திலிங்கம், சிற்றம்பலம் என்ற மூன்று தம்பிமாரும் இருந்தனர். இவருக்கு அடுத்த தம்பி பொன்னம்பலம். 18.05.1886இல் பிறந்தவர் என எனது தந்தையார் அவருடன் உரையாடி எழுதிய குறிப்புக் காணப்படுகின்றது. ஆகவே செல்லக்குட்டி அவர்கள் பிறந்த ஆண்டு 1884 அல்லது 1885ஆக இருக்கவேண்டும் என ஊகிக்கலாம். ஏறத்தாழ 140 ஆண்டுகளின் பின் அவருக் கான சமாதி ஆலயம் புனரமைக்கப்பட்டிருப்பது சிறப்பு.இவர் சிலகாலம் சுதுமலையில் வாழ்ந்ததால் சுதுமலைச் செல்லப்பா சுவாமி எனவும் அழைக்கப்பட்டிருக்கிறார்.

எனது சிறுபராயத்தில் சமாதிக் காணியைப் பராமரித்து வந்த சொக்கலிங்கம் நடராஜா அவர்கள் (மாணிக்கம் மாமா) எங்கள் வீட்டுக்குக் கிழக்கே அடுத்த வீட்டில் வாழ்ந்ததால் (இடப்பெயர்வு வரை) எங்கள் வீட்டுக்கு வந்து எனது பெற்றோருடன் உரையாடும்போது செல்லக்குட்டி சுவாமிபற்றி அறிந்திருந்தேன். சமாதிக் காணியில் நாள்தோறும் விளக்கு வைப்பது பற்றியும் அவர் பேசுவது நினைவிருக்கிறது. சுவாமி அவர்கள் தனது இறுதிக் காலங்களில் பிறந்த மண்ணாகிய விழிசிட்டியில் வாழ்ந்து, குறிப்பிட்ட காணியில் தியானத்தில் அமர்ந்து சமாதி அடைந்திருந்தார்.

செல்லக்குட்டி சுவாமியின் ஒன்றுவிட்ட மகன் முறை யான அம்பலவாணரின் பிள்ளைகள் திரு. திருஞான சம்பந்தர், செல்வி.பரிமளம், செல்வி. நளாயினி ஆகியோருக்குச் சொந்தமாக இருக்கும் சமாதிக் காணியில் இன்று இந்த மடாலயம் எழுப்பப்பட்டுத் திருமுழுக்குக் காணும் செய்தி நிறைவானது. ஆன்மிகம் செழிந்த விழிசிட்டிக்குப் பெருமை தருவது.நிகழ்வு சிறப்புறவும் தொடர்ந்து மடாலயப் பூசைகள் ஒழுங்காக நடைபெறவும் இறை அருள் வேண்டி நிற்கின்றேன்.

**திருமதி.கோகிலா மகேந்திரன், கலாவித்தகர்,**
**(தலைவர், சோலைக்குயில் அவைக்காற்றுக்களம்) விழிசிட்டி, தெல்லிப்பழை.**

## செஞ்சொற் செல்வரின் பிரார்த்தனை உரை

தெல்லிப்பழை விழிசிட்டி செல்லப்பா சுவாமிகள் (செல்லக்குட்டி சுவாமி) நினைவாக அறிய மலர் ஒன்று வெளியிடுவது அறிந்து ஆனந்தமடைகின்றேன். சைவப் பாரம்பரியம் மிக்க விழிசிட்டி கிராமத்தில் வாழ்ந்த சித்தர் மகான் பற்றிய வரலாற்றை பலரும் அறியும் வண்ணமாக இந்நூல் வெளிவருவது பாராட்டுக் குரியது. செல்லக்குட்டி சுவாமிகளை சமாதி இருத்தி சிவலிங்கம் பிரதிஷ்டை செய்து வழிபாடு செய்த பாரம்பரியம் ஆவணப்படுத்தல் அவசியமாகும். சுவாமிகளின் சமாதிக் கோயில் தற்போது அழகாகக் கட்டப்பட்டு அடியார்கள் வழிபாடு செய்வதற்கு வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

எம் மண்ணில் காலத்துக்கு காலம் சித்தர்கள் தோன்றி மக்களை ஆற்றுப்படுத்தினார்கள். மக்களிடம் புண்ணிய பாவம் பற்றிய சிந்தனையை வளப்படுத்தினார்கள். தர்ம காரியங்களை சித்தர்கள் செய்வித்தார்கள். மக்களின் உடற் பிணிகளையும், உளப்பிணிகளையும் போக்குவதற்கு அருந்தொண்டாற்றினார்கள்.

விழிசிட்டி கிராமத்தில் தோன்றிய செல்லக்குட்டி சுவாமிகளின் திருவருளை மீளவும் நினைவூட்டும் வகையில் அன்பர்கள் எடுத்துக் கொண்ட முயற்சியைப் பாராட்டுகின்றேன். சமாதித் திருக்கோவில் கும்பாபிஷேகம் நல்ல வண்ணம் சிறக்க பிரார்த்திக்கின்றேன். சுவாமிகள் வரலாறும் திருவருளும் என்றும் நிலைக்க பிரார்த்தித்து அமைகின்றேன்


**கலாநிதி ஆறு.திருமுருகன்,தலைவர்,தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்.**

## ஆசிச் செய்தி

யாழ். மாவட்டம், வலிகாமம் வடக்கில் J/223 இல் வித்தகபுரம் பிரிவில், பொற்கலந்தம்பை என்னும் காணியில் அமைந்த செல்லப்பா சித்தர் பெருமானின் சமாதி, பல இன்னல்களைக் கடந்த உறவுக்காரர்களின் பெரு முயற்சியினால் மடாலயம் ஆக்கப்பட்டு ஆவணித் திங்கள் 23 ஆம் திகதியன்று திருமுழுக்குக் காணவிருப்பது இறைசெயல் அன்றி வேறில்லை. இம் மகோன்னத நிகழ்வு சிறப்புற்று அமையவும் இம் முயற்சியில் இறைசெயலால் அரும்பணியாற்றிய அனைவருக்கும் இறையாசி வேண்டி வாழ்த்தி அமைகிறேன்.

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பராமாச்சாரிய சுவாமிகள்,நல்லை ஆதீன குருமுதல்வர்.**

## செல்லப்பா சாமியார்



சுதுமலை செல்லப்பா சாமியார் மாவிட்டபுரத்தில் திருமணம் செய்தவர். சிறந்த முருகனடியார். தன் வாழ்நாள் முழுவதையும் தன் குடும் பத்தைக் கவனிப்பதிலும் முருகனுக்குத் தொண்டு செய்வதிலும் கழித்துவந்தார். தன் ஆயுட்காலத்தின் இறுதி நாட்கள் முழுவதையும் முருக வழிபாட்டிலே கழித்துப் பேரின்பம் கண்டவர். இல்லறத்தில் நின்று துறவறத்தைக் கடைப்பிடித்தவர்

இவர் ஒரு நாள் பிற ஊர் சென்றிருந்தார். கோயில் வழிபாட்டை முடித்ததும் தன்நண்பன் ஒருவனிடம் சென்றிருந்தார். நல்வழிபாட்டை முடித்தவருக்குப் பசி எடுத்தது. கால் நடையாகவே எங்கும் செல்வார். காசைக் கையாலே தொடுவது மிக மிகக் குறைவு. ஆகவே நண்பன் வீட்டிலே பசி ஆறுவது அவரின் நோக்கம். ஆசாரக் குறைவானவர்கள் வீட்டிலே தங்கவும் மாட்டார். அப்படியான இடங்களில் உணவை வாங்கி உண்ணவும் மாட்டார். அவர் சென்ற நண்பன் வீட்டிலே கடிநாய் ஒன்று நின்றது. அதனை வழமையாகப் பகல் நேரங்களிலே கட்டிவைப்பார்கள். அன்று காலையில் நாயைக் கட்டிவைக்கப் பணியாளன் மறந்து விட்டான். குரைக்காமல் வந்து அந்த நாய் சாமியாரின் காலைக் கௌவி விட்டது. அந்த நண்பன் சாமியாரின் சீடனும் கூட.

"ஐயோ சாமி, இந்த நாய் இப்படிச் செய்து விட்டதே" என்று நண்பன் அழாக் குறையாகச் சொன்னான். பின்னர் நாயை அடிக்கத் தடி எடுத்தான்.

"வேண்டாம் மகனே நாயை அடிக்காதே" என்றார் சாமியார்.

நண்பன் பின்னர் தன்பணியாளனைக் கூப்பிட்டுத் தாறுமாறாக ஏசத் தொடங்கினான்.

"வேண்டாம் மகனே, பாவம் அந்த ஏழையை ஏசாதே" என்றார்.

"சாமி, மருந்து கட்டவோ?" என்றான் நண்பன்.

"வேண்டாம் மகனே" என்றார் சாமியார். சாமியாரின் பொறுமையைக் கண்ட நண்பன் செய்வது இன்னது என்று தெரியாது தவித்தான். ஈற்றிலே கண்கள் கலங்கிவிட்டன. அழுதேவிட்டான் அந்தச் சீடன்.

மகனே, சொல்வதைக்கேள். ஒரு பாட்டுப் பாடட்டோ? என்றார் சாமியார்."இந்தப் பாட்டு இந்த நேரம் எதற்கு? உங்களுக்குக் கடிகாயம் வேறு" என்றான் சீடன்.

"மகனே கடியும் மிடியும். இந்த நேரம் பாட்டுப்பாட உவப்பான நேரம். நீ "ஓம்" என்றால் பாட்டுப் பாடுவேன்" என்றார் சாமியார்.

"சாமியாரின் வாயாலே பாட்டுப்பாட, அதனை நான் கேட்க என்ன தவம் செய்தேனோ தெரியாது" என்றான் சீடன்.தனக்குரிய கணீர் என்ற குரலிலே சாமியார் பாடினார். பாடல் இதோ,

"நாய் கடித்ததென்றுமே நலிந்து நிற்பதெனடா நாய் கடித்ததேனடா இந்தக் (தன்நெஞ்சைத் தொட்டு) காட்டு நாயும் தானுமே வேட்டை குட்டி மூன்றையும் கூட்டி வந்த தேனடா? வீட்டு நாயும் விரைந்துமே"

**மாவை சண்முகநாதக் குருக்கள்,**
**ஈழத்துச் சித்தர்.**

## வலி.வடக்கு பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாண மாவட்டத்திலே வலிகாமம் வடக்குப் பிரதேசத்திலே சைவமும் தமிழும் ஒருங்கே அமையப்பெற்ற பல வரலாற்று முக்கியத்துவம் பெற்ற ஆலயங்களையும் தன்னகத்தே கொண்டு விளங்கும் தெல்லிப்பழை பிரதேசத்திலே வித்தகபுரம் என்னும் கிராமத்தில் பொற்கலந்தம்பை என்னும் இடத்திலே அமைந்துள்ள "செல்லப்பா சித்தர்" மடாலயத்தில் கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

மனிதப் பிறவியின் நோக்கம், இலட்சியம், குறிக்கோள் ஆகியவற்றை அடைவதற்கான வழிமுறைகளைக் காட்டியவர்கள் சித்தர்கள். இவர்கள் மனம்,புத்தி,அகங்காரம் ஆகிய மூன்றையும் நீக்கி சித்தத்தையே சிவமாகக் கொண்டு இயற்கையோடு இயைந்து வாழ்ந்து இயற்கையை முற்றும் அறிந்தவர்களாக இருக்கின்றனர். இவர்கள் பிரபஞ்ச சக்தியைப் பெற்று நினைத்த நேரத்தில் நினைத்த உருவத்தைப் பெற்று மக்களை நல்வழிப்படுத்துபவர்களாகக் காணப்படுகின்றனர்.

சாதாரண ஆலயங்களில் இருந்து கண்மூடி தியானம் செய்து வேண்டுவதற்கும் சித்தர் ஜீவசமாதி அடைந்த இடங்களிலே இருந்து கண்மூடி தவம் செய்து உருக்கத்தோடு வேண்டுகின்றபோது நிறைய பலன்களைப் பெறமுடியும் என்பது ஐதீகம். சித்தர்கள், மகான்களின் சமாதி ஆலயங்களுக்குச் சென்று மனதை ஒருநிலைப்படுத்தி தியானம் செய்து கோரிக்கைகளை முன்வைத்து வழிபடுவதன் மூலமாக தோஷங்கள், கர்ம வினைகள் அனைத்தும் நீங்குவதாகவும் பித்துருக்களின் சாபங்கள் நீங்குவதாகவும் கூறப்படுகின்றது.

இத்தகைய ச்க்திபெற்ற சித்தர்களின் மகான்களின் சமாதிகள் பாதுகாத்து பராமரிக்கப்பட வேண்டியவை. அந்தவகையிலே பல்வேறு சூழ்நிலைகளாலும் நீண்ட காலம் பராமரிப்பின்றி காணப்பட்ட பொற்கலந்தம்பை "செல்லப்பா சித்தர்" மடாலயத்தினை மீண்டும் வழிபாட்டுக்குரிய இடமாக அமைக்கும் முயற்சி தற்போது அவர்களின் வழித்தோன்றல்களினால் மேற்கொள்ளப்பட்டு வருவது வரவேற்கத்தக்கதொன்றாகும். இவ்வாலயமானது மென்மேலும் வளர்ச்சி பெறுவதற்கும் கும்பாபிஷேக நிகழ்வானது சிறப்புற அமைவதற்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

**திருமதி சிவகெங்கா சுதீஸ்னர், பிரதேச செயலாளர்,**
**வலி.வடக்கு, தெல்லிப்பழை.**

(1750)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# இங்கிலாந்து அபார பந்துவீச்சு இலங்கை அணி தடுமாற்றம்



இங்கிலாந்து பந்துவீச்சாளர்கள் அசத்த இலங்கை அணி முதல் இன்னிங்சில் 236 ரன் எடுத்தது.

இங்கிலாந்து சென்றுள்ள இலங்கை அணி மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

மான்செஸ்டரில் முதல் டெஸ்ட் நடக்கிறது. டாஸ் வென்று முதலில் பட் செய்த இலங்கை அணிக்கு நிஷான் மதுஷ்கா (4), திமுத் கருணாரத்னே (2), மாத்யூஸ் (0) ஏமாற்றினர். குசால் மெண்டிஸ் (24), தினேஷ் சண்டிமால் (17) சோபிக்கவில்லை. கமிந்து மெண்டிஸ் (12), பிரபாத் ஜெயசூர்யா (10) நிலைக்கவில்லை. இலங்கை அணி 113 ரன்னுக்கு 7 விக்கெட்டுகளை இழந்து திணறியது.

பின் இணைந்த கப்டன் தனஞ்செயா டி சில்வா, மிலன் ரத்னாயகே ஜோடி நம்பிக்கை தந்தது. பொறுப்பாக ஆடிய தனஞ்செயா அரைசதம் விளாசினார். எட்டாவது விக்கெட்டுக்கு 63 ரன் சேர்த்த போது பஷீர் பந்தில் தனஞ்செயா (74) அவுட்டானார். மறுமுனையில் அசத்திய மிலன் (72) தன்பங்கிற்கு அரைசதம் விளாசினார். இலங்கை அணி முதல் இன்னிங்சில் 236 ரன்னுக்கு ஓல் அவுட் ஆனது.

இங்கிலாந்து சார்பில் வோக்ஸ், சோயப் பஷீர் தலா 3, அட்கின்சன் 2 விக்கெட் வீழ்த்தினர். போதிய வெளிச்சமின்மையால் முதல் நாள் ஆட்டம் முன்னதாகவே முடிவுக்கு வந்தது. இங்கிலாந்து அணி முதல் இன்னிங்சில் 22/0 ரன் எடுத்திருந்தது. டக்கெட் (13), லாரன்ஸ் (9) அவுட்டாகாமல் இருந்தனர். (6)

# ஐ.சி.சி தலைவராக ஜெய்ஷா?



சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் (ஐ.சி.சி.) தலைவராக நியூசிலாந்தைச் சேர்ந்த கிரேக் பார்கிளே இருக்கிறார். 2020 ஆம் ஆண்டு நவம்பர் 24 ஆம் திகதி அவர் அந்த பொறுப்பை ஏற்று வரும் நிலையில்

வருகிற நவம்பர் 30 ஆம் திகதியுடன் அவரது 4 ஆண்டு காலம் பதவி முடிகிறது. 3 முறை அந்தப் பதவியில் இருந்த அவர் மேலும் அதில் நீடிக்க விரும்பவில்லை. ஐ.சி.சி. சேர்மன் பதவியில் இருந்து விலக முடிவு செய்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் (பி.சி.சி.ஐ.) பொதுச் செயலாளரும், மத்திய உள்துறை மந்திரி அமித்ஷாவின் மகனுமான ஜெய்ஷா அந்த பதவிக்கு போட்டியிடுகிறார். அவர் ஐ.சி.சி.யின் சேர்மனாக ஒரு மாதத்தில் தேர்வு செய்யப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஐ.சி.சி. சேர்மன் பதவிக்கு விண்ணப்பிப்பதற்கான கடைசி நாள் வருகிற 27 ஆம் திகதியாகும். ஜெய்ஷா மட்டுமே இதற்கு விண்ணப்பிக்கிறார் என்று தெரிகிறது. டிசெம்பர் மாதம் 1ஆம் திகதி ஐ.சி.சி. புதிய சேர்மனாக ஜெய்ஷா பொறுப்பேற்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஏற்கனவே இந்தியாவைச் சேர்ந்த ஜக்மோகன் டால் மியா, சரத் பவார், என்.சீனிவாசன், ஷசாங்க் மனோகர் போன்றவர்கள் ஐ.சி.சி. தலைமை பதவி வகித்தனர். அவர்கள் வழியில் ஜெய்ஷா இணைகிறார். இளம் வயதில் ஐ.சி.சி. சேர்மன் என்ற வரலாற்றை அவர் பதிவு செய்கிறார். (6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3203


### டர்சிகா




### டயானா




### நிலா




### லிந்துஜா




### திலக்ஷன்




### அபிஷாந்

மாமியார்: ஏம்மா மருமகளே காலையில சூரியன் உதிக்கிறதுக்கு முன்னாடியே எந்திரிச்சு வேலையை பாரும்மா... நீ ரொம்ப லேட்டா எழுந்திருக்கிற...

மருமகள்: அந்த சூரியன் சாயங்காலம் சீக்கிரமே தூங்க போயிடுது. அதனாலே சீக்கிரம் எழுந்திரிக்குது.. ஆனால் நா லேட்டா தானே தூங்குறேன்... அதனால லேட்டாத் தான் எழுந்திரிக்க முடியும்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் மூன்று முதலீட்டு வலயங்கள்

## இராஜாங்க அமைச்சர் திலும்



(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தின் புதிய முதலீட்டுத் திட்டத்தின் கீழ், ஏழு புதிய முதலீட்டு வலயங்களை நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

மாங்குளம், பரந்தன், காங்கேசன்துறை, திருகோணமலை, இரணவில, ஹம்பாந்தோட்டை மற்றும் பிங்கிரிய ஆகிய பிரதேசங்களை அண்மித்து முதலீட்டு வலயங்கள் நிறுவப்படவுள்ளன.

இந்த ஆண்டிற்குள் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டு ஒப்பந்தங்கள் எதிர்பார்க்கப்பட்டதாகவும் ஆனால் கடந்த 6 மாதங்களில் முதலீட்டு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி ஏற்கனவே 800 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் கிடைத்துள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார். (6)

## நியமனம் வழங்கல்



ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் கௌரவ தலைவர் அல்ஹாஜ் என்.எம்.அமீன் அவர்கள் ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் நிர்வாக சபை உறுப்பினருக்கான நியமனக் கடிதம் கலாபூஷணம் பரீட் இக்பாலுக்கு வழங்கப்பட்டது. அருகில் செயலாளர், பொருளாளர், உப தலைவர், தேசிய அமைப்பாளர் ஆகியோரையும் காணலாம்.

(ச-1026)


லங்கா மஹால் (PVT) LTD

DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

(226)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
00919566156719

WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974





## முருகனை நெஞ்சில் பதி!

முருகனை நெஞ்சிற் பதித்திடுமே-பக்தி
மூண்டிடும் மார்க்கம் விதித்திடுமே! தெய்வ
அருணகிரிவாக்கினுக்கே-நிகர்
அவனியில் உண்டோ மெய்ந் நோக்கினுக்கே
படித்திடும் சிந்தை வலுவேற்றி-உள்ளம்
பதைத்திடும் அச்ச நிலை மாற்றி மிகத்
துடித்திடும் துன்ப வினை தீர்க்கும்-தினம்
சுடர்வடி வேலனை நல்லூரில்
வணங்கிடுவோமே

கவிஞர் செ.பரமநாதன்

## நல்லைக் கந்தவேளே!

பைந்தமிழ் தந்திடும் பாவலர்கள் யாவற்கும்
பாடுபொரு ளாகநிற்பாய்
செந்தமிழ்க் குன்றமே செப்பிடுங் கவியெலாம்
தேன்சிந்தும் சந்தமருள்வாய்
எந்தையே வந்தனை இறுகவே பற்றுவோர்
இடர்களைய வாருமையா
மந்தநிலை மாற்றவே மாநிலமு மேற்றவே
வருநல்லைக் கந்தவேளே!

கலாபூஷணம், சந்தக்கவிஞர்,
நவ.பாலகோபால்.

# இராசிபலன்

23.08. 2024
ஆவணி 07, வெள்ளிக்கிழமை
சதுர்த்தி பிற்கல் 3.51 மணிவரை

ரேவதி பின்னிரவு 1.41மணிவரை
சுபநேரம் 6.05-7.35 மணிவரை
இராகுகாலம் 10.35-12.05 மணிவரை

சந்திராஷ்டமம்
ஆயில்யம், மகம்

வளவன்

**மேஷம்**
வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், திடீர் பயணங்கள் ஏற்படலாம், எடுத்த காரியங்களை நிறைவு செய்ய அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.

**ரிஷபம்**
பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு, வழிபாட்டில் ஆர்வம் கூடும்.

**மிதுனம்**
மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறலாம், பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும், மன நிறைவு கூடும் நாள், போசன சுகமுண்டு,

**கடகம்**
விரதம்,வழிபாடுகளில் நம்பிக்கை வைப்பீர்கள், பிற இனத்தவர்களால் பெருமைகள் வந்து சேரலாம், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**சிம்மம்**
தொழில் ரீதியான குழப்பங்கள் தோன்றி மறையும், சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், பயணங்களால் , மனச்சோர்வு ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கன்னி**
கேளிக்கை , கொண்டாட்டங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நட்பு வட்டம் விரிவடையும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**துலாம்**
நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், செய்தொழில் மேன்மையுண்டு , கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்**
புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், பொருளாதார நிலை உயர வழி வகை செய்வீர்கள்.

**தனுசு**
இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், சுப விரயங்கள் கூடும் நாள்.

**மகரம்**
உள்ளம் மகிழும் சம்பவமொன்று நிகழும் வாய்ப்புண்டு, தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், உற்சாகத்தோடு செயற்படுவீர்கள், போசன சுகமுண்டு.

**கும்பம்**
பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், செல்வ நிலை உயரும் நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், எடுத்த காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

**மீனம்**
ஆலய வழிபாடு ஆனந்தம் தரும் , கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்புகள் இடம் பெறலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

ஒற்றுமை இல்லாதவர்களிடம் சேர்ந்து இருப்பதைவிட தனியாக இருப்பதே மேல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்கள் மீதான இனவழிப்பு;

# சர்வதேச நீதி கிடைக்க வேண்டும்

## தென்னாபிரிக்கத் தூதுவரிடம் சிறீதரன் எம்.பி கோரிக்கை

(கொழும்பு)

**இலங்கைக்கான தென்னாபிரிக்கத் தூதுவர் சாண்டில் எட்வின் ஷால்க், துணைத்தூதுவர் றெனி எவர்சன் வர்ணி மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் கொழும்பிலுள்ள தென்னாபிரிக்கத் தூதரகத்தில் இடம்பெற்றுள்ளது.**



இந்தக் கலந்துரையாடலின் போது ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமிழ்மக்களின் நிலைப்பாடு மற்றும் தமிழ்ப் பொது வேட்பாளர் குறித்த சாதகத் தன்மைகள் குறித்தும் ஈழத்தமிழர்கள் சார்ந்த அரசியல் முன்னெடுப்புகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதன்போது, காசாவில் நடைபெறும் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் (ICC) வழக்குத் தாக்கல் செய்துள்ள தென்னாபிரிக்கா, ஈழத் தமிழர்கள் மீது புரியப்பட்ட இனப்படுகொலைக்கும் சர்வதேச நீதியைப் பெற்றுத்தர முயற்சிக்க வேண்டும் என்றும் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரிலும் இது விடயம் சார்ந்து தங்களின் கரிசனையை வெளிப்படுத்த வேண்டும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன், தென்னாபிரிக்கத் தூதுவரிடம் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-33-314)

# பல்துறைசார் நூல் வெளியீடுகள்

(யாழ்ப்பாணம்)

ஆன்மிக பேச்சாளர் பொன்.சுகந்தனின் பொன் விழாவும் அவரின் வரலாற்று ஆவண நூல் வெளியீட்டு விழாவும் நாளை மறுதினம் 25 ஆம் திகதியிலிருந்து ஆரம்பமாகவுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வானது கொழும்பு தமிழ்ச்சங்க மண்டபத்தில் ஓய்வு நிலை அரசாங்க அதிபர் உடுவை எஸ்.தில்லை நடராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இதன்போது பொன். சுகந்தனின் கல்லப்பணிகள் என்னும் நூலும் வெளியிடப்படவுள்ளது. அதனைத் தொடர்ந்து இவரது பல்வேறு துறை சார்ந்த 12 நூல்கள் உலகெங்கும் தொடர்ச்சியாக வெளிவரவுள்ளது.

சொற்பொழிவுத்துறை என்னும் நூல் நல்லை ஆதீன ஆலயத்திலும், சிறுகதைத் துறை நூல் மாத்தளையிலும், திரைப்பட மற்றும் நாடகத் துறை என்னும் நூலானது இந்தியாவிலும், பாடலாக்கத் துறை என்னும் நூலானது கனடாவிலும், பட்டிமன்றத் துறை என்னும் நூலானது ஜேர்மனியிலும், கவிதைத் துறை என்னும் நூலானது அவுஸ்திரேலியா சிட்னியிலும், சமூகப்பணி என்னும் நூலானது பிரான்சிலும், ஓவியத் துறை என்னும் நூலானது மலேசியா கோலாம்பூரிலும், கல்வித்துறை என்னும் நூலானது லண்டனிலும், ஆன்மிகப் பணி என்னும் நூலானது திருகோணமலையிலும், ஆய்வுக் கட்டுரைத்துறை என்னும் நூலானது அம்பாறையிலும் நடைபெறவுள்ளது. (க-6)

# சித்திரத்தேர் வெள்ளோட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - வட்டக்கச்சி ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் கோவில் புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா நாளை மறுதினம் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

கடந்த 19 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# நல்லூர் உற்சவகால தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தை முன்னிட்டு இளங் கலைஞர் மன்றம் மற்றும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் இணை அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று வெள்ளிக்கிழமை நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம் பெறும்.

மாலை 6.45-7.10 மணி வரை இடம் பெறவுள்ள நல்லூர் சாரங்கம் இசை மன்றத்தின் குழு இசை நிகழ்வில் வாசஸ்பதி ரஜீந்திரன் நெறியாள்கையில் ஹார்மோனியம்-ஜே.பிரதீபன், மிருதங்கம்-மு.சுலக்சன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து 7.15-8.30 மணிவரை இடம்பெறவுள்ள வீணை இசை நிகழ் வில் வீணை-பேரானந்தராஜா டினோஷன், மிருதங்கம்-சி.துரைராசா, கடம்-சி.மாதுளன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (6)


## அரியாலை- நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானம் சண்டேஸ்வர பெருமானுக்குரிய சித்திரத்தேர் அமைத்தலுக்குரிய விண்ணப்பங்கள் கோரல்

மேற்படி திருத்தலத்திற்குரிய சண்டேஸ்வரர் தேர் அமைக்கப் பெறுவதற்கு திருவருள் கூடியுள்ளதால் தகுதியுள்ள ஆசாரிமார்களிடம் இருந்து விலைமனுக்கள் வரும் 5 நாட்களுக்குள் கோரப்பட்டுள்ளது.

மேலதிக அமைப்பு விபரங்களை சண்டேஸ்வரர் தேர் குழுத் தலைவர், செயலாளரிடம் பெற்றுக் கொள்ளலாம்

தொடர்புகளுக்கு (1752)

தலைவர்-மாணிக்கராஜா அமலன்-074 011 2811

செயலாளர்-தில்லையம்பலம் கிரிதரமோகன்-074 216 8717



## 31ம் நாள் நினைவு கூரலும் கண்ணீர் அஞ்சலியும்

24.07.2024 அன்று இறைபதம் அடைந்த எமது கல்லூரியின் தமிழ்ப்பாட ஆசிரியர்

அமரர். **ச. கருணாகரன்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



நலன்புரிக்கழகம், யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரி, அச்சுவேலி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகரிக்கும் நோய் நிலைமை நிதியை அதிகரிக்க நடவடிக்கை

## சுகாதார அமைச்சு

(கொழும்பு)

வயது முதிர்ந்தவர்களில் 45 வீதத்துக்கும் அதிகமானோர் இரத்த அழுத்த நோயாலும் 24 வீதமானோர் நீரிழிவு நோயாலும் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார மற்றும் கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் இரத்த அழுத்த நோய் மற்றும் நீரிழிவு நோயாளர்கள் பெரும்பாலாக காணப்படுகின்றனர்

எனவே, இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு நோய் கட்டுப்படுத்தல் செயற்றிட்டத்துக்காக எதிர்வரும் வருடங்களில் அதிகளவு நிதியை ஒதுக்குவதற்கு தீர்மானித்துள்ளோம்.

அதேவேளை, ஆரம்ப சுகாதார சேவைக்கு ஒதுக்கப்படும் நிதியை அடுத்த வருடத்தில் மேலும் அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நோய்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு மேலாக நோய்களை கட்டுப்படுத்துவது தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படும் எனத் தெரிவித்தார். (6)

# 58 ஆவது அகவை தின வாழ்த்தும் சேவை நயப்பும்

திருமதி. தயாநிதி (B.BA, Dip.in.Ed, SLTS-1)
தர்மரத்தினம்
(சிரேஷ்ட ஆசிரியர் யா/கொக்குவில் ஸ்தான சி.சி.த.க பாடசாலை)

சேவை விபரம்

- யா/நெடுந்தீவு சிக்கிரியாம் பள்ளம் அ.த.க.பாடசாலை (17.08.1989–15.10.1989)
- யா/நெடுந்தீவு மகா வித்தியாலயம் (16.10.1989–31.12.2001)
- யா/கன்னியர்மடம் மகாவித்தியாலயம் (01.01.2002–15.01.2002)
- யா/யாழ் இந்து ஆரம்பப்பாடசாலை (16.01.2002–31.12.2013)
- யா/கொக்குவில் ஸ்தான சி.சி.த.க. பாடசாலை (01.01.2014–22.08.2024)



Best Wishes

எமது பாடசாலையின் கல்வி வளர்ச்சிக்காக நிறைவான சேவையாற்றி, ஓய்வு பெறும் ஆசிரியரை வாழ்த்தி அவரது ஓய்வுக்காலம் சிறக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(736)

வாழ்த்துவோர்
பாடசாலைச்சமூகம்,
யா/கொக்குவில் ஸ்தான சி.சி.த.க.பாடசாலை

# ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்
# வலிகாமம் வடக்கு பிரதேசசபை
# உப அலுவலகம்- தெல்லிப்பளை

**விண்ணப்பதாரர்- கைலாசநாதகுருக்கள் கைம்பெண் லலிதாம்பாள்**
**முகவரி- இல 22,லோவர் வீதி, பதுளை**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் வடக்கு பிரதேசசபை, தெல்லிப்பளை உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 09, ராஜேஸ்வரி அம்மன் கோயில் வீதியில் இவ் ஆதனம் அமைந்துள்ளது.

குறித்த ஆதனமானது 2020ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31ஆம் திகதி, பிரசித்த நொத்தாரிஸ் தக்ஷாமினி நவநாதன் முகதாவில் 344ஆம் இலக்கத்தில் முடிந்த அறுதி உறுதிப்படி கைலாசநாதகுருக்கள் கைம்பெண் லலிதாம்பாள் என்பவரை வந்தடைந்தது.

**ஆதன விபரம்**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்கு பகுதி தெல்லிப்பளை கோவிற்பற்று தெல்லிப்பளை இறை நிலப்பரப்பு 6 குளி 4 இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் கே.ஆறுமுகம் அவர்களால் வரையப்பட்ட 6815/24.06.2024 ஆம் இலக்க வரைபடத்தின்படி துண்டு நில.பர 6 குளி 4 ஆக காட்டப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்

கிழக்கு -மிகுதி ஆதனம்
வடக்கு - வீதி
மேற்கு-கே.கே.எஸ் வீதி
தெற்கு - இராஜ இராஜேஸ்வரி அம்மன் கோயிலுக்குரிய ஆதனம்

மேற்குறித்த ஆதனத்தை கைலாசநாதகுருக்கள் கைம்பெண் லலிதாம்பாள் எனும் பெயரில் பெயர் மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளி நாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு பெயர்மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(1755)

**செயலாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை,**
**காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி )**


தெரிவுசெய்த பொருட்கள் 40% வரை கழிவு




நிர்மாணம், கைத்தொழில், கல்வி,
வர்த்தக கண்காட்சி மற்றும் களியாட்ட விழா

23 24 25 ஆம் திகதி ஆகஸ்ட் 2024

@ முற்றவெளி விளையாட்டரங்கு, யாழ்ப்பாணம், இலங்கை
மு.ப.10.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை



கட்டிடம் மற்றும் நிர்மாணப் பொருட்கள்
கல்வி, மற்றும் தகவல் தொழில்நுட்பம்
உபகரணங்கள் மற்றும் சாதனங்கள்
கைத்தொழில் மற்றும் பொறியியல்
கட்டுமான ஆலோசனை சேவைகள்
கட்டுமான இயந்திரங்கள் மற்றும் கைத்தொழில் வாகனங்கள்
நிலைபேறான வலுசக்தி
கமத்தொழில் வாகனங்கள்

TVS asianpaints SCOT CAMPUS வலம்புரி ALUMEX
agro EME CIOB

+94 77 22 79 594
+94 72 21 22 709


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1991 -இந்து<br>நட்சத்திரம்':திருவாதிரை<br>உயரம்:5'5"<br>தகைமை/தொழில்: A/L , படப்பிடிப்பு<br>எதிர்பார்ப்பு:படித்த பெண்<br>தொ.இ: B/14739 | பிறப்பு:1992-இந்து<br>நட்சத்திரம் :அத்தம்<br>கி.பா: 27 7இல் செவ்<br>உயரம் : 5'4"<br>தகைமை/தொழில்: Bsc, Lecturer<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/14764 |
| பிறப்பு:1999-இந்து<br>நட்சத்திரம்:பூரட்டாதி<br>2 இல் செவ்<br>உயரம்:5'8"<br>தகைமை/ தொழில்:A/L, Business<br>எதிர்பார்ப்பு:தகுதியான பெண்<br>தொ.இ: B/14741 | பிறப்பு-1992-இந்து<br>நட்சத்திரம்:உத்திரட்டாதி<br>கி.பா: 28 ¼ 7இல் செவ்<br>உயரம் : 5'1"<br>தகைமை/ தொழில்: B.SC , Msc<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/14766 |
| பிறப்பு:1985-இந்து<br>நட்சத்திரம்:பூராடம்<br>8 இல் செவ்<br>உயரம்:5'8"<br>தகைமை/தொழில்: Soft ware Engineer<br>எதிர்பார்ப்பு: Engineer, Banker.<br>தொ.இ: B/14742 | பிறப்பு-1990-இந்து<br>நட்சத்திரம்:உத்திரட்டாதி 7 இல் செவ்<br>கி.பா:31 1/4<br>உயரம் :5'5"<br>தகைமை/தொழில்:Bsc, உதவிப்பிரதேச செயலாளர்<br>எதிர்பார்ப்பு: உயர் பதவி<br>தொ.இ: G/14767 |

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
**E-mail:- kalyanamalai.jaffna@gmail.com**
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# கட்சிக்கான கொடி அல்ல
# வருங்கால தலைமுறையின் வெற்றிக்கான கொடி இது!

## தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய்




(சென்னை)

**தமிழக வெற்றிக் கழகத்தின் கட்சிக்கொடியை பனையூரில் உள்ள கட்சித் தலைமை அலுவல கத்தில் அக் கட்சியின் தலைவர் விஜய் நேற்று காலை 9.15 இற்கு அறிமுகம் செய்து வைத்ததுடன் கொடியையும் ஏற்றிவைத்தார்.**

கட்சிக் கொடியின் மேலும் கீழும் சிவப்பு நிறமும் நடுவில் மஞ்சம் நிறமும் உள்ளது. கொடியின் நடுவில் வாகை மலர் இருக்க அதன் இருபுறமும் யானை உள்ள வாறு கொடி வடிவமைக்கப் பட்டுள்ளது.

இந்த விழாவில் கட்சியை பிரபலப்படுத்தும் வகையில் பிரசாரப் பாடல் அடங்கிய குறுந்தகடு வெளியிடப்பட்டது. கவிஞர் விவேக் எழுதி தமன் இசையமைத்து இந்த பாடல் வெளியிடப்பட்டுள்ளது. பாது காப்பு காரணம் கருதி குறைந்த அளவு நிர்வாகி களே இக் கூட்டத்தில் பங்கேற்றுள் ளனர். விழாவின் ஆரம்பத்தில் விஜய் உறுதிமொழி வாசிக்க கட்சி நிர்வாகிகள் உறுதிமொழியை ஏற்றுக் கொண்டனர்.

சென்னை பனையூர் அலுவலகத்தில் தமிழக வெற்றிக்கழகக் கொடியை அறிமுகப்படுத்தி கொடிப் பாடலை நடிகர் விஜய் வெளியிட்டு உரையாற் றினார். அப்போது அவர் கூறியதாவது. அரசியல் பயணத்தை தொடங்கி பெப்ரவரி மாதம் கட்சியை அறிவித்தேன் அப்போதில் இருந்து இந்த நாளுக்காகத்தான் காத்திருந்தேன்.

கட்சியின் கொடியை கொடியாக மட்டும் நான் பார்க்கவில்லை. தமிழ் நாட்டின் வருங்கால எதிர் காலமாகவே பார்க்கிறேன் மாநாட்டிற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றது. விரைவில் மாநாட்டிற்கான திகதி அறிவிக்கப்படும்.

என் நெஞ்சில் குடியிருக்கும் தமிழ்நாட்டு மக் களின் நலனுக்காக நாம் அனைவரும் இணைந்து உழைப்போம்.

நம்பிக்கையாக இருங் கள், நல்லதே நடக் கும் வெற்றி நிச்சயம் எனத் தெரிவித்தார். (6)

## 37 ஆண்டுகள் சிறைவாசம் நாடு திரும்பிய ஷாஜகான்

(டில்லி)

பங்களாதேஷில் 37 ஆண்டுகளாக சிறையில் இருந்த இந்தியர் ஒருவர் விடுதலை செய்யப்பட்டு நாடு திருமபினார்.

திரிபுராவைச் சேர்ந்த ஷாஜகான் என்பவர் 1988 ஆம் ஆண்டு பங்களா தேஷில் உள்ள தனது மாமி யார் வீட்டிற்கு சென்றுள் ளார். அப்போது அவரது மாமியார் வீட்டில் சோதனை மேற்கொண்ட பொலிஸார் சட்டவிரோதமாக நுழைந்த தற்காக அவரை கைது செய் தனர்.

25 வயதில் கைது செய்யப்பட்ட அவருக்கு 11 ஆண்டு கள் சிறை தண்டனை விதிக் கப்பட்டது. 11 ஆண்டுகள் சிறைத்தண்டனை முடிந்த பின்பும் வேறு வழக்கிலும் அவரை பொலிஸார் தொடர் புபடுத்திய தால் அவரது விடுதலை சாத்தியமில் லாமல் போனது.

இந்நிலையில், ஜாரா அறக்கட்டளையின் உதவி யினால் 37 ஆண்டுகளுக்கு பின்பு இப்போது அவர் சிறையிலிருந்து விடுவிக்கப்பட் டுள்ளார்.

இந்திய எல்லையில் பாதுகாப்புப் படையினரிடம் ஷாஜகான் ஒப்படைக்கப் பட்டார். அவர் கைது செய்யப் படும் போது அவரது மனைவி கர்ப்பமாக இருந் தார். இப்போது தான் முதன் முறையாக தனது மகனின் முகத்தை ஷாஜகான் பார்த் துள்ளார்.

தனது விடுதலை குறித்து பேசிய ஷாஜகான், "என்னுடைய மகிழ்ச்சியை வார்த்தைகளால் விவரிக்க முடியாது. நான் சொர்க் கத்தில் இருப்பது போல் உணர்கிறேன்.

எனக்கு மறுபிறவி எடுத்தது போன்று உள்ளது. இந்த வாழ்நாளில் நான் என் சொந்த ஊருக்கு திரும் புவேன் என்று நான் நினைக்கவில்லை.

என்னை வீட்டிற்கு அழைத்து வந்தது ஜாரா அறக்கட்டளைக்கு என் வாழ்நாள் முழுவதும் நான் கடமைப்பட்டிருப்பேன்" என்று தெரிவித்தார். (6)

## திரிபுராவில் வெள்ள அனர்த்தம்

### ➤ 10 பேர் உயிரிழப்பு
### ➤ 32 ஆயிரம் பேர் நிவாரண முகாம்களில் தஞ்சம்



(அகர்தலா)

திரிபுராவில் கன மழை யால் ஏற்பட்ட நிலச்சரிவு மற்றும் வெள்ளத்தால் 10 பேர் உயிரிழந்தனர்.

32 ஆயிரம் பேர் நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள னர்.

திரிபுராவில் கடந்த சில தினங்களாக கனமழை கொட்டித் தீர்த்து வருகிறது. பல்வேறு இடங்களில் சாலைகள் வெள்ளக்காடாக மாறின. கடந்த ஞாயிற் றுக்கிழமை முதல் அதிக மழை பெய்து வருவதால், அனைத்து முக்கிய ஆறு களிலும் நீர்மட்டம் ஏற்கனவே அபாயக் கட் டத்தை தாண்டியுள்ளது.

தெற்கு திரிபுரா மாவட் டத்தின் தேவிபூர் பகுதியில் ஏற்பட்ட நிலச்சரிவில் வீடு இடிந்து விழுந்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உயிரிழந்தனர். முஹீரி, லாகேங் நதிகளில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் தாழ்வான பகுதிகளில் தண்ணீர் புகுந்துள்ளது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப்பணிகளை தீவிரப் படுத்துமாறு, மாவட்ட நிர்வாகங்களுக்கு முதல்வர் மாணிக் சாஹா உத்தரவிட்டுள்ளார்.

இதுவரை நிலச்சரிவு மற்றும் வெள்ளத்தால் 10 பேர் உயிரிழந்தனர். 330 நிவாரண முகாம்களில் 32 ஆயிரம் பேர் தங்க வைக் கப்பட்டுள்ளனர் என பேரிடர் மீட்பு படையினர் தெரிவித் தனர்.

முதல்வர் மாணிக் சாஹா மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவிடம் உதவி கோரினார்.

மீட்புப் பணிகளுக்கு உதவ கூடுதலாக, நான்கு தேசிய பேரிடர் மீட்பு குழுக் கள் மாநிலத்திற்கு வந்துள் ளன. (6)

பிர
நிற

(வே
முன்
ஜனாதி
வடக்கு
தல் பர
வேளை
பாதிக்க
யாற்றிய
ருக்கும்
உரை
தனக்கு
தேவை
தார்.
சுதா


117
உ
(மாட்ரி
உலகி
தான பெ
யாஸ் பெ
117 வயத
மானார்.
பாணைச்
டாமிகோ
மிகவும்
அறிவிக்க
அமெரி
பிரான்சி
ஸ்பெயின்
தம்பதியி
வயது மற
மொரேரா
பிறந்தவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரசாரத்தில் திடீரென உரையை நிறுத்தி மருத்துவ உதவியை நாடிய ட்ரம்ப்




(வோஷிங்டன்)

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வடக்கு கரோலினாவில் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்ட வேளை திடீரென உடல் நிலை பாதிக்கப்பட்டதையடுத்து உரையாற்றிய ட்ரம்ப் பேசிக் கொண்டிருக்கும் போது திடீரென உரையை நிறுத்திவிட்டு தனக்கு மருத்துவ உதவி தேவைப்படுவதாக தெரிவித்தார்.

சுதாரித்துக் கொண்ட ட்ரம்ப் தனக்கு மருத்துவ உதவி வேண்டும் என்று தனது மைக்ரோபோனில் மெல்லிய குரலில் கேட்டார். இதையடுத்து அவரை அங்கிருந்து மீட்ட மருத்துவக்குழு அவருக்கு முதலுதவி செய்தது.

துப்பாக்கிச் சூடு சம்பவத்தில் நூலிழையில் உயிர்தப்பிய ட்ரம்ப் முதல் முறையாக பொது வெளியில் பேசுவதால் அவரை சுற்றி தோட்டாக்களை தடுத்து நிறுத்தும் புல்லட் ப்ரூப் கண்ணாடி அரண் பாதுகாப்புக்காக அமைக்கப்பட்டு இருந்தது. கண்ணாடி அரணில் நின்று உரையாற்றிக் கொண்டிருந்த முன்னாள் ஜனாதிபதி ட்ரம்பிற்கு திடீரென உடல்நிலை பாதிக்கப்பட்டது.

தேர்தல் பரப்புரையின் போது துப்பாக்கி சூடு சம்பவத்தில் உயிர்பிழைத்த ட்ரம்ப், பொது வெளியில் பேசும் போது உடல்நலம் பாதிக்கப்பட்டு, உரையை நிறுத்திய சம்பவம் அங்கு கூடியிருந்தவர்களை வருத்தத்தில் ஆழ்த்தியது. (6)


# மருந்து தொழிற்சாலையில் தீ விபத்து - 17 பேர் பலி

(டில்லி)

இந்தியாவில் ஆந்திர பிரதேசம் மாநிலத்தில் அனகாபள்ளி மாவட்டத்தில் அச்சுதாபுரம் பகுதியில் உள்ள மருந்துத் தொழிற்சாலை ஒன்றில் இடம்பெற்ற தீ விபத்தில் 17 பேர் உயிரிழந்துள்ளனர்.

குறித்த மருந்துத் தொழிற்சாலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை 200 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்துள்ளனர். மதிய உணவு நேரத்தின்போது மருந்து தொழிற்சாலையில் உள்ள ரியாக்டர் வெடித்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன்போது அருகில் உள்ள பொருட்கள் அனைத்தும் தீப்பிடித்து எரிந்துள்ளன. இந்த தீ விபத்தில் சிக்கி 17 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும், விபத்தில் படுகாயம் அடைந்த 20 இற்கும் மேற்பட்டோருக்கு வைத்தியசாலைகளில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மின் கசிவு காரணமாக இந்த விபத்து ஏற்பட்டிருக்கக் கூடும் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். (6)





# 117 வயதில் காலமானார் உலகின் வயதான பெண்

(மாட்ரிட்)

உலகின் மிகவும் வயதான பெண் மரியா பிரான்யாஸ் மொரேரா என்பவர் 117 வயதில் நேற்று காலமானார். இதையடுத்து ஜப்பானைச் சேர்ந்த 116 வயது டாமிகோ இடுகா உலகின் மிகவும் வயதாக பெண் என அறிவிக்கப்பட்டார்.

அமெரிக்காவின் சான்ஸ்பிரான்சிஸ்கோ நகரில் ஸ்பெயின் வாழ் அமெரிக்க தம்பதியினருக்கு பிறந்த 117 வயது மரியா பிரான்யாஸ் மொரேரா, (1907இல் பிறந்தவர்) உலகின் வயதான பெண் என 2023 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டார்.

இவருக்கு அடுத்தபடியாக ஜப்பானைச் சேர்ந்த டாமிகோ இடுகா (1908ஆம் ஆண்டு மே.23 இல் பிறந்தவர்) 116 வயதுடன் உயிருடன் வசித்து வருகிறார். இவர் உலகின் மிகவும் வயதான பெண் என நேற்று அறிவிக்கப்பட்டுள்ளார். இவர் முன்னாள் மலையேற்ற வீராங்கனை ஆவார். மேற்கு ஜப்பானில் ஆஸ்ஹியா நகரில் வசித்து வருகிறார். (6)

# வெள்ள அரிப்பால் வெளிவந்த 233 மில்.பழமையான டைனோசர் படிமம்

(ப்ரசிலியா)


பிரேசில் நாட்டில் கடந்த ஜூன் மாதம் பெய்த கன மழையால், 5,00,000இற்கும் அதிகமான மக்கள் வீடு வாசலை விட்டு இடம் பெயர்ந்தனர்.

அந்த நாடே வெள்ளக் காடாக காட்சியளித்தது. இந் நிலையில், ரியோ கிராண்டே டோ சுலில் என்ற இடத்தில் உள்ள சாவோ ஜோனோ டோ போலசின் நீர்த் தேக்கத் திற்கு அருகில் ஏற்பட்ட வெள்ள அரிப்பில், சுமார் 233 மில்லியன் ஆண்டுகள் பழமையான டைனோசர் புதை படிமம் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

ஃபெடரல் யுனிவர்சிட்டி ஆஃப் சாண்டா மரியாவின் பழங்கால ஆராய்ச்சியாளரான ரோட்ரிகோ டெம்ப் முல்லர் தலைமையிலான குழு இந்த படிமானத்தை கண்டுபிடித்தது. இந்த படிமானமானது ஹெர்ரொராசௌரிடே என்ற டைனோசர் குடும்பத்தைச் சேர்ந்தது என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

கண்டுபிடிப்பானது டைனோசர்களின் வாழ்க்கை முறை, அதன் அழிவுக்கான காரணம் பற்றிய விரிவான ஆய்வுக்கும் வழிவகுக் கலாம் என்கிறார்கள்.

இருப்பினும் வெள்ளப் பெருக்கினால், சில படிமா னங்கள் அழிந்தும் இருக் கலாம் என சொல்லப் படுகிறது. எனினும், கிடைத்த படிமானங்களை பாதுகாக்க ஆராய்சியாளர்கள் முயற்சியை மேற் கொண்டு வருகின்றனர். (6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியேறிய எவருக்கும் கட்சியில் மீள இடமில்லை

## மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

**(கொழும்பு)** ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து விலகி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவு தெரி வித்த எவரையும் மீண்டும் இணைத்துக் கொள்ளமாட்டோம் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரி வித்துள்ளார்.



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முதலாவது தேர்தல் பிரச்சார கூட்டத்தில் நேற்று முன் தினம் உரையாற்றுகையிலேயே முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து பிரிந்துள்ள கட்சிகள் எதிர்காலத்தில் மீண்டும் கட்சிக்கு வர வேண்டிய நிலை ஏற்படும்.

குறுகிய அரசியல் இலாபங்களுக்காக தமது கட்சிக்கு ஆதரவளிக்காமல் வேறு கட்சிக்கு ஆதரவளிக்கும் வகையில் சிலர் செயற்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (6)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 180 | 170 | 120-160 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 180 | 190 | 200 |
| பச்சைமிளகாய் | 160 | 150 | 250 | 200 | 250 |
| தக்காளி | 250 | 300 | 280 | 250 | 350 |
| மரவள்ளிக்கிழங்கு | 220 | 250 | 180 | 120-140 | 160 |
| கோவா | 300 | 350 | 300 | 350 | 320 |
| கரட் | 300 | 350 | 350 | 350 | 400 |
| பூசணி | .120 | 140 | 120 | 80 | 120 |
| புடோல் | 80 | 150 | 100 | 100 | 120 |
| வாழைக்காய் | 250 | 350 | 280 | 150-200 | 250 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 300 | 150-300 | 300 |
| பெரிய வெங்காயம் | 250 | 220 | 200 | 220 | 250 |
| பாகற்காய் | 300 | 300 | 280 | 300-350 | 280 |
| வெண்டக்காய் | 80 | 100 | 120 | 80-130 | 300 |
| கருணைக் கிழங்கு | 160 | 180 | 160 | 130 | 250 |
| பயற்றங்காய் | 250 | 300 | 140 | -- | 150 |
| லீக்ஸ் | 350 | 450 | 300 | 350 | 400 |
| பீற்றூட் | 180 | 200 | 50 | 250 | 200 |
| கறிமிளகாய் | 500 | 800 | 600 | 450 | 700 |
| முருங்கைக்காய் | 200 | 160 | 100 | 50-90 | 120 |
| போஞ்சி | 400 | 650 | 550 | 460 | 600 |
| கத்தரி தம்புள்ள | 150 | 150 | 180 | -- | 180 |
| கீரை - 1 பிடி | 80 | 120 | 50 | 50 | 120 |
| தேசிக்காய் | 500 | 600 | 500 | 300-350 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 130 | 100 | 80-120 | 80-130. |
| இராசவள்ளி | -- | 900 | 650 | 650 | 800 |
| வெங்காயபூ | 300 | 200 | 400 | -- | 320 |
| முள்ளங்கி | 100 | 120 | 120 | 80 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 90 | 100 | 80 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 80 | 50 | 70 |
| ஈரப்பலா | 100 | 60 | 50 | 50 | 70 |

# இன்று ஒரு தகவல் 218



தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## ஏமாற்றாதே! ஏமாறாதே!

இந்த உலகத்திலே ஏமாற்றுபவர்கள் அதிகம். ஏமார்ந்து போறவர்கள் அதைவிட அதிகம். ஒருவர் கடன் கொடுக்கிறார். இன்னொருத்தர் கடன் வாங்கிறார். இந்த இரண்டு பேர்ல யார் கெட்டிக்காரர்?

இந்தக் கேள்விக்கு உடனடியாக பதில் சொல்ல முடியாது. அந்தக் கடன் திரும்பி வருதா இல்லையா என்பதை வைத்துத்தான் அதை முடிவு செய்ய முடியும். ஒரு பெரிய ராஜா இருந்தார். ஒருநாள் ஒரு வெளிநாட்டு வியாபாரி வெளிநாட்டில் இருந்து நிறைய குதிரைகள் எல்லாம் கொண்டு வந்திருந்தார்.

ராஜா பார்த்தார். அவருக்கு நிறையக் குதிரைகள் தேவை. அதனாலே அப்படியே எல்லாக் குதிரைக்கும் என்ன விலை சொல்கிறாய்? என்று கேட்டார். வியாபாரியும் ஏதோ ஒரு விலை சொன்னார். சரி என்று அவர் சொன்ன விலை கொடுத்து எல்லா குதிரைகளையும் வாங்கி விட்டார்.

அதுமட்டுமில்லை இன்னும் குதிரைகள் இருந்தாலும் கொண்டு வாருங்கள் வாங்குகிறேன் என்றார். மன்னா! உங்கள் உத்தரவுப்படியே வேண்டும் என்கின்ற குதிரைகளைக் கொண்டு வருவதற்கு நான் தயாரா இருக்கின்றேன். ஆனால் நான் பல தேசங்களுக்குப் போய் நல்ல ஜாதிக் குதிரையாக பார்த்து வாங்க வேண்டியிருக்கிறது.

அதற்கு கொஞ்சம் பணம் தேவைப்படுகிறது. அட்வான்சாக நீங்க கொஞ்சம் பணம் கொடுத்தீர்கள் என்றால் எனக்கு ரொம்ப சௌகரியமாக இருக்கும் என்றார் அந்த வியாபாரி. அதனாலே என்ன? வேண்டும் என்கிறதை வாங்கிக் கொண்டு போங்கள் என்றார் ராஜா. எவ்வளவு வேண்டும் என்று கேட்டார்.

இரண்டு இலட்சம் ரூபாய் வேண்டும் என்றார் வியாபாரி. உடனே அதை அவருக்கு கொடுத்து அனுப்பும் படியாக உத்தரவு போட்டார் ராஜா. வியாபாரி பணத்தை வாங்கிக் கொண்டு போய் வருகின்றேன் என்று சொல்லி விட்டு புறப்பட்டு போய்விட்டார்.

ஒரு நாள் ராஜா தன்னுடைய அமைச்சரைக் கூப்பிட்டார். அமைச்சரே நமது நாட்டிலே யாரும் ஏமாந்து போகக்கூடாது என்பது என்னுடைய கொள்கை அப்படி யாராவது இருந்தால் அவங்களுக்கு தகுந்த உதவியை நாம் செய்ய வேண்டும். நமது நாட்டிலே யார் யார் எந்தெந்த வகையிலே ஏமாற்றுவார்கள் என்று பட்டியல் ஒன்று தயார் செய்து எடுத்துக் கொண்டு வாருங்கள் என்று உத்தரவு போட்டார்.

அமைச்சரும் இரண்டு மூன்று நாளிலே ராஜா கேட்டது மாதிரியே ஒரு பட்டியல் தயார் செய்து அவரிடம் கொண்டு போய்க் காட்டினார். ராஜா அந்த பட்டியலை வாங்கிப் பார்த்தார். அந்தப் பட்டியலிலே நம்பர் ஒன்றிலே ராஜா பெயர் இருந்தது. அமைச்சரிலே மரியாதை இருந்ததனாலே அந்த ராஜாவுக்கு கோபம் வரவில்லை. என்ன அமைச்சரே! ஏமாந்தவர்கள் பட்டியலிலே முதலில் என்பெயரை எழுதியிருக்கிறீர்கள் என்று கேட்டார். பின்ன என்ன ராஜா? முன் பின் அறிமுகமே இல்லாத ஒரு குதிரை வியாபாரி வந்தான். அவன் யார் எந்த ஊர் என்று தெரியாது?

அப்படிப்பட்ட ஒருத்தனிடம் அட்வான்சாக இரண்டு இலட்சம் ரூபாய் கொடுத்து அனுப்பி இருக்கின்றீர்களே! உங்களை விட ஏமாந்தவர்கள் இந்த நாட்டிலே வேறு யார் இருக்க முடியும்? என்றார் அமைச்சர். அப்படியா சொல்லுகிறீர்கள் என்றார் ராஜா. ஆமாம் அந்த ஆள் பணம் வாங்கிக் கொண்டுபோய் அதிக நாள் ஆகிவிட்டது! இதுவரைக்கும் குதிரை வந்து சேர்ந்தபாடில்லை! இதற்கு மேலேயும் வந்து சேரும் என்கின்ற நம்பிக்கை எனக்கு இல்லை!

நமது அரசாங்கத்திற்கு இன்னும் குதிரைகள் தேவை என்பது எனக்கும் தெரியும்! இருந்தாலும் ஒரு அந்நிய தேசத்துக்காரனை நம்பி இவ்வளவு பெரிய தொகையை கொடுத்து அனுப்பியது எந்த வகையிலே புத்திசாலித்தனம்? இப்போது அந்த ஆள் உங்களையே ஏமாற்றிவிட்டான் இல்லையா? அதனாலே தான் ஏமாந்தவர்கள் பட்டியலிலே முதலிலே உங்கள் பெயரை எழுதினேன் என்றார். ராஜா கொஞ்ச நேரம் யோசித்தார். சரி இப்போது அந்த வியாபாரி அன்றைக்கு சொல்லிவிட்டுப் போனது மாதிரியே இன்றைக்கு குதிரைகளை கொண்டு வருகின்றான் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்புறம் என்ன செய்வீர்கள் என்று கேட்டார். அப்படி அந்த ஆள் கொண்டுவந்து விட்டார் என்றால் வைத்துக் கொள்ளுங்கள் இந்தப் பட்டிலிலே இருக்கிற உங்கள் பெயரை அழித்து விட்டு அந்த இடத்திலே அந்த ஆள் பெயரை எழுதி விடுகின்றேன் என்றார் அமைச்சர். அதுவும் சரி தான். ஏமாற்றுவதற்கு ஒரு சந்தர்ப்பம் இருந்தும் அதை சரியாக பயன்படுத்திக் கொள்ளவில்லை என்றால் அவனும் ஒரு ஏமாளிதானே! அது எப்படி இருந்தாலும் நாம் எச்சரிக்கையாக ஏமாந்து விடாமல் இருக்க வேண்டியது இந்த காலத்திலே ரொம்ப அவசியம்.

இன்றைக்கு ஏப்ரல் முதலாம் திகதி ஆகிவிட்டதே? அதனாலே ஒரு நண்பனைத் தேடிப் போனேன். போய் அவனைப் பார்த்து டேய் எனக்கு உன்னை ஐந்து வருடமாகத் தெரியும். மிகவும் நல்லவன். எனக்கு ஒரு நூறு ரூபாய் கடனாக கொடுக்க முடியுமா? என்று கேட்டேன்.

மன்னிக்க வேண்டும். நான் கடன் கொடுப்பது இல்லை என்றான் அவன். ஏன் அப்படி சொல்லுகிறாய் என்று கேட்டேன். அதற்கு அவன் எனக்கும் உன்னை ஐந்து வருடமாகத் தெரியும். அதனாலே தான் கொடுக்கிறதுக்கு யோசிக்கின்றேன் என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமை மீறல்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

## ஐ.நா. அறிக்கை

(ஜெனிவா)

**இலங்கை இராணுவம் தன்வசம் வைத்திருக்கும் காணிகளை விடுவித்தல், வடக்கு கிழக்கில் புதிதாக காணிகளை கைவசப்படுத்தலை நிறுத்துதல், பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் வேண்டுகோள்விடுத்துள்ளது.**

United Nations

குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது பாதிக்கப்பட்டவர்களின் சார்பில் நினைவேந்தல் முயற்சிகளில் ஈடுபடுவதையும் குற்றச்செயல்களில் இருந்து நீக்கி, அவற்றுக்கு ஆதரவளித்தல் போன்ற நம்பிக்கையை கட்டியெழுப்பும் வழிமுறைகளை நடைமுறைப் படுத்துவதன் மூலம் நிலைமாற்றுக்கால நீதிக்கான சூழலை உருவாக்கவேண்டும்.

மேலும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்கள் என நம்பகதன்மை மிக்க விதத்தில் குற்றஞ்சாட்டப்படுபவர்களை உயர் பதவிகளில் அமர்த்தக் கூடாது அவர்களை நீக்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்பில் உடனடி தடையை விதிக்கவேண்டும். அதற்கு பதிலாக முன்வைக்கப்படும் சட்டவாக்கம் சர்வதேச மனித உரிமைகள் சட்டத்துடன் பொருந்திச் செல்வதாக காணப்பட வேண்டும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (6)


# கேள்வி அறிவித்தல்
# சபைநிதி வேலைத்திட்டம்-2024
# வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்

01. தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பபாய் அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறான வேலைகளுக்காக கோரப்படுகின்றது.
02. கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்விக்கமைய நடாத்தப்படும். எனினும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 04/2016 (i)/(ii) and (iii) ஆம் இலக்க 2021.02.18 ஆம் திகதிய மற்றும் 01/2024ஆம் இலக்க 01.03.2024 ஆம் திகதிய பொது நிதிச் சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகள் பின்பற்றப்படுவதுடன். வட மாகாணத்தை சார்ந்தவர்களுக்கும் மற்றும் வேண்டப்படும் உரிய தரத்தை கொண்டிருப்போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும்.
03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.
04. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி IV இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி V இல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, யாழ் வீதி மானிப்பாய் எனும் முகவரியில் (தொலைபேசி இலக்கம் 021 225 6651) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கில மொழியிலான பூரணமான கேள்வி ஆவணங்களின் தொகுதி ஒன்றை தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, யாழ் வீதி மானிப்பாய் எனும் முகவரியில் 23.08.2024ஆம் திகதியிலிருந்து 05.09.2024 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் காலை 09.00 மணிக்கும் பி.ப 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.3,000.00 இனை (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வியை இரு ஆவணங்களில் தயாரித்து மூலஆவணம், நகல்ஆவணம் என தனித்தனி உறைகளிட்டு, தலைவர்,உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய் எனும் முகவரிக்கு 06.09.2024ஆம் திகதி காலை 10.30 மணிக்கு முன்பதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்தவுடன் வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
08. கேள்விப் பிணை வைப்புத்தொகையானது கீழே அட்டவணைகளில் காட்டப்பட்டவாறு அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியில் செலுத்தி அதன் உண்மைப்பிரதியினை கேள்வி ஆவணத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
09. கேள்வி திறப்பதற்கான முன்னோடிக்கூட்டம் 2024.09.02 ஆம் திகதி வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை மானிப்பாய் தலைமை அலுவலகத்தில் காலை 10.00 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்திற்கு ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்து கொள்ளமுடியும்
10. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை தகுந்த காரணங்களுடன் நிராகரிக்கவோ அல்லது மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

| தொ இல | வேலை விபரம் மற்றும் கேள்வி இல | மதிப்பீட்டு தொகை மில்லியன் (VAT நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை: கேள்வி செல்லுபடியாகும் காலம் | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | i)யூனியன் மைதான வீதி புனரமைத்தல் ,ஆனைக்கோட்டை ii) கண்ணிதோட்ட வீதி புனரமைத்தல், சுதுமலை வடக்கு iii) கம்சாகடை வீதி புனரமைத்தல் (மிகுதிவேலை) சண்டிலிப்பாய் மேற்கு NP/14/41(16)/W/CF/2024/20 | 3.37 | 63 நாட்கள் | C8 and C7 (வீதி) | 63 நாட்கள் | 33,800.00 | 04.12.2024 |
| 02 | i)சின்னப்பா வீதி இரண்டாம் ஒழுங்கை புனரமைத்தல்(மிகுதிவேலை) ,நவாலி கிழக்கு ii)முருகமூர்த்தி வீதி புனரமைத்தல்,சாவல்கட்டு NP/14/41(16)/W/CF/2024/21 | 2.08 | 63 நாட்கள் | C8 and C7 (வீதி) | 63 நாட்கள் | 20,900.00 | 04.12.2024 |
| 03 | i)சென்.அன்ரனாஸ் மைதான வீதி புனரமைத்தல்(கட்டம் I) பெரியவிளான் ii)சித்திரமேழி வெள்ளவாய்க்கால் வீதி புனரமைத்தல் இளவாலை NP/14/41(16)/W/CF/2024/22 | 2.50 | 63 நாட்கள் | C8 and C7 (வீதி) | 63 நாட்கள் | 25,000.00 | 04.12.2024 |
| 04 | i)சகாயபுரம் RDS வீதி முதலாம் ஒழுங்கை புனரமைத்தல்,மாதகல் கிழக்கு ii)சகாயபுரம் RDS வீதி இரண்டாம் ஒழுங்கை புனரமைத்தல்,மாதகல் கிழக்கு NP/14/41(16)/W/CF/2024/23 | 3.02 | 63 நாட்கள் | C8 and C7 (வீதி) | 63 நாட்கள் | 30,300.00 | 04.12.2024 |
| 05 | வைத்தியசாலை வீதி புனரமைத்தல்,பண்டத்தரிப்பு NP/14/41(16)/W/CF/2024/26 | 3.73 | 63நாட்கள் | C8 and C7 (வீதி) | 63 நாட்கள் | 37,300.00 | 04.12.2024 |
| 06 | அம்மன் வீதி புனரமைத்தல்,பண்டத்தரிப்பு NP/14/41(16)/W/CF/2024/25 | 5.68 | 63 நாட்கள் | C7 and C6 (வீதி) | 77நாட்கள் | 56,900.00 | 18.12.2024 |

**தலைவர்,**
**உள்ளூராட்சி அதிகாரசபை பெறுகைக்குழு,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.**
**23.08.2024**


# கத்தி வெட்டுக்கு இலக்கான நபரொருவர் மருத்துவமனையில்

## ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

நெல்லியடி நகரில் எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியரை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் கத்தியால் வெட்டி காயப்படுத்திய சம்பவம் தொடர்பில் பொலிஸார் ஒருவரை கைது செய்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில் நெல்லியடி பொலிஸ் நிலையத்துக்கு முன்புறமாக உள்ள எரிபொருள் நிலையத்தில் குறித்த வன்முறை சம்பவம் இடம்பெற்றது. இதன்போது நெல்லியடி நகரிலுள்ள கூட்டுறவு சங்கத்துக்கு சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியரே கத்தி வெட்டுக்கு இலக்காகியுள்ளார்.

காயமடைந்தவர் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். குறித்த சம்பவம் தொடர்பாக சிசிரிவி காணொளியை அடிப்படையாகக் கொண்டு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்ட நிலையில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (6-33)

# தேசிய கால்பந்தாட்ட அணியில் இணைந்த மன்னார் மாணவன்



(மன்னார்)

இலங்கை தேசிய கால்பந்தாட்ட அணியில் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை மாணவன் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார். மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை மாணவன் செல்வன் கிதுஷன் 17 வயதுக்குட்பட்ட கால்பந்தாட்ட அணியில் இவ்வாறு இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

இலங்கை தேசிய மட்ட உதைப்பந்தாட்ட குழுவினுள் இந்த பாடசாலையின் 7 ஆவது மாணவனாக செல்வன் கிதுஷன் இணைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (6-285)

# மக்கள் போராட்ட முன்னணி துண்டுப்பிரசுர விநியோகம்

(யாழ்ப்பாணம்)

மக்கள் போராட்ட முன்னணியின் பிரசார நடவடிக்கைகள் வசந்த முதலிகேவின் பங்கேற்புடன் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

யாழ்.மத்திய பேருந்து நிலையப் பகுதியில் மக்கள் போராட்ட முன்னணியின் கொள்கைகளை விளக்கும் துண்டுப்பிரசுரங்கள் நேற்று முன்தினம் காலை விநியோகிக் கப்பட்டது.

இதன்போது மக்கள் போராட்ட முன்னணியின் செயற்பாட்டாளர்கள் பலரும் கலந்து கொண்டனர்.


அரகலய போராட்ட குழுவினருடன் இணைந்து முன்னிலை சோசலிசக் கட்சி, புதிய ஜனநாயக மாக்ஸிஸ லெனினிஸ கட்சி, சோசலிச மக்கள் மன்றம், உள்ளிட்ட ஜனநாயக சிவில் சமூகத்தினர் இணைந்து தேர்தல் அரசியலில் களமிறங்கியுள்ளனர்.

மக்கள் போராட்ட முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராக நுவான் போபகே குடைச் சின்னத்தில் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது. (6-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கல்கியின் பாகம் - 3
# பொன்னியின் செல்வன்
## காவியத் தொடர் 564



திறந்த கதவின் வழியாக நந்தினி வந்தாள். வந்தவளைக் கண்கொட்டாமல் அவன் பார்த்துக் கொண்டிருந்தான். அவனுடைய வியப்புக்கும், திகைப்புக்கும் பல காரணங்கள் இருந்தன. வர்ணனைக் கெட்டாத அவளுடைய சௌந்தரியம் ஒரு காரணம். எதிர்பாராத முறையில் அவளைச் சந்திக்கும்படி நேர்ந்தது இன்னொரு காரணம்.

இலங்கையில் அவன் பார்த்திருந்த மூதாட்டியின் உருவத்தோடு இந்த யுவதியின் உருவம் எவ்வளவு ஒத்திருக்கிறது என்ற எண்ணம் மற்றொரு காரணம். உருவங்கள் ஒத்திருக்கின்றனவா? அல்லது அந்த மூதாட்டிதான் உயரிய ஆடை ஆபரணங்களை அணிந்தபடியினால் இப்படித் தோற்றமளிக்கிறாளா? இனிய கிண்கிணி நாதக் குரலில், "ஐயா! நீர் மிகவும் நல்லவர்!" என்று கூறினாள் நந்தினி. வந்தியத்தேவன் "வந்தனம்!" என்றான்.

"நல்லவருக்கு அடையாளம் சொல்லாமற் போவதுதானே? தஞ்சை அரண்மனையிலிருந்து என்னிடம் சொல்லிக் கொள்ளாமலே போய் விட்டீர்கள் அல்லவா!" என்றாள் நந்தினி. வந்தியத்தேவன் நகைத்தான்.

"தஞ்சைக் கோட்டைக்குள் வருவதற்கு உமக்கு நான் உதவி செய்தேன். என் கைவிரலிலிருந்து பனை முத்திரை மோதிரத்தை எடுத்துக் கொடுத்தேன். அதை என்னிடம் திருப்பிக் கொடுத்து விட்டாவது போயிருக்க வேண்டாமா?" வந்தியத்தேவன் வெட்கித்து மௌனமாக நின்றான்.

"எங்கே? இப்போதாவது அதைத் திருப்பிக் கொடுக்கலாம் அல்லவா! அதன் உபயோகம் தீர்ந்து போயிருக்குமே? மறுபடியும் தஞ்சைக் கோட்டைக்கு வரும் எண்ணம் உமக்கு இல்லை தானே?" என்று கூறி, நந்தினி தன் அழகிய மலர்க் கரத்தை நீட்டினாள்.

"தேவி! அந்த முத்திரை மோதிரத்தை இலங்கைத் தளபதி பூதி விக்கிரம கேசரி கைப்பற்றிக் கொண்டு விட்டார். ஆகையால் அதைத்திருப்பிக் கொடுக்க இயலவில்லை, மன்னிக்க வேண்டும்" என்றான் வந்தியத்தேவன்.

"என்னுடைய ஜன்ம சத்துருவிடம் நான் உமக்குக் கொடுத்த மோதிரத்தைக் கொடுத்து விட்டீர் அல்லவா? மிக்க நன்றியுள்ள மனிதர் நீர்." "நானாகக் கொடுத்து விடவில்லை. பலவந்தமாக எடுத்துக் கொண்டார்கள்."

"வாணாதி ராயர் குலத்தில் உதித்த வீராதிவீரர் பலவந்தத்துக்கு உட்பட்டு ஒரு காரியம் செய்தீரா? என்னால் நம்பமுடியவில்லை!" "அம்மணி! இங்கே இச்சமயம் நான் வந்திருப்பதும் பலவந்தம் காரணமாகத்தானே? தங்களுடைய ஆட்கள்"

"உண்மையாகச் சொல்லும், ஐயா! நன்றாய் நினைத்துப் பார்த்துச்சொல்லும்! பலவந்தத்தினால் மட்டும் நீர் இங்கே வந்தீரா? இஷ்டப்பட்டு வரவில்லையா? பல்லக்கில் ஏற்றப்பட்ட பிறகு கீழே குதித்து ஓடுவதற்கு உமக்குச் சந்தர்ப்பம் இல்லையா?" என்று நந்தினி கேட்ட கேள்விகள் கூரிய அம்புகளைப் போல் வந்தியத்தேவன் நெஞ்சைத் துளைத்தன. "ஆம்? இஷ்டப்பட்டுத்தான் வந்தேன்" என்றான்.

"எதற்காக வந்தீர்?" தாங்கள் எதற்காக என்னை அழைத்துவரச் செய்தீர்கள்? "என் முத்திரை மோதிரத்தைத் திருப்பிக்கேட்பதற்காக" அது மட்டும்தானா?"

"இன்னும் ஒரு காரணம் இருக்கிறது. என் கணவரின் பாதுகாப்புக்கு உட்பட்ட பொக்கிஷ நிலவறையில் நீர் அன்றிரவு இருந்தீர் அல்லவா?"

வந்தியத்தேவன் திடுக்கிட்டான். "எனக்குத் தெரியாது என்றா எண்ணினீர்? அழகுதான்! எனக்குத் தெரிந்திராவிட்டால் அன்றிரவு நீர் தப்பிச் சென்றிருக்க முடியுமா?" "தேவி" "ஆம்! எனக்குத் தெரியும், பெரிய பழுவேட்டரையருக்கும் தெரியும். உம்மை அங்கேயே கொன்று போட்டுவிடும்படி பழுவேட்டரையர் சுரங்க வழிக்காவலனுக்குக் கட்டளையிட்டார். அவர் அப்பால் சென்றதும் நான் அந்தக் கட்டளையை மாற்றிவிட்டேன் அதனால் நீர் பிழைத்தீர்.

(தொடரும்)





# சிறுவர் அரங்கம்

## தாயை ஏமாற்ற நினைத்தான்

ஒரு ஊரில் இளைஞன் ஒருவன் இருந்தான். அவன் படிக்கவில்லை. வேலை எதுவும் பார்க்கவில்லை. அவன் தந்தை இறந்து விட்டான். தாய் மட்டுமே இருந்தாள். அவள் தன்னிடம் இருந்த பணத்தை அக்கம் பக்கத்தில் இருப்பவர்களுக்கு வட்டிக்குக் கொடுப்பாள். அந்த வட்டியைக் கொண்டு வாழ்ந்து வந்தாள்.

"எனக்குப் பிறகு, உனக்கு யார் சோறு போடுவது. ஏதாவது வேலை செய்து பிழைத்தால் நல்லது என்று எவ்வளவோ சொல்லியும் அவன் அதை பொருட்படுத்துவதே இல்லை. மகன் மீது உள்ள பாசத்தால், தினமும் உணவு அளிப்பாள். அவ்வப்போது தாயிடம் ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் கேட்டு வாங்கிக் கொண்டு போய் சூதாடுவான் ஒரு நாள், "எனக்கு இரு நூறு ரூபாய் கொடு. நான் ஒரு வியாபாரம் செய்யப் போகிறேன். ஒரு மாதத்தில், திருப்பி தந்து விடுவேன்" என்று கெஞ்சிக் கேட்டான். தாய் கொடுக்க மறுத்து விட்டாள்.

அடுத்த நாள் அவன், ஒரு காவலரிடம் ரகசியமாக ஒரு செய்தி சொன்னான். (கிடைப்பதில் ஆளுக்குப் பாதி என்பது ரகசிய திட்டம்) அன்று இரவு காவலர் ஒருவர் அவனைப் பிடித்துக் கொண்டு, அவன் தாயிடம் வந்து, "அம்மா! உன் மகன் சூதாடினான். அவனைப் பிடித்து நீதிமன்றத்திற்குக் கொண்டு சென்றோம். நூறு ரூபாய் அபராதம் போட்டிருக்கின்றனர்.

அதைக் கட்டாவிடில், மூன்று மாதம் சிறையில் இருக்க வேண்டும். என்ன சொல்கிறாய்? என்றார் காவலர். "ஐயா, என்ன சொல்லியும் அவன் வேலை செய்யாமல் ஊரைச் சுற்றித் திரிகிறான். நானோ இருப்பதைக் கொண்டு சிக்கனமாக வாழ்கிறேன். அதோடு பெற்ற கடனுக்காக அவனுக்குச் சோறு போடுகிறேன். இப்பொழுது நூறு ரூபாய் அபராதம் செலுத்தினால், மீண்டும், மீண்டும் சூதாடிவிடுவான். ஆகையால், மூன்று மாதம் சிறையில் அவன் இருந்தால், புத்தியாவது வரும். எவ்வளவோ பெரிய மனிதர்கள், தேசபக்தர்கள் சிறைக்குப் போகவில்லையா? செயலில் வேறுபாடு இருந்தாலும் சிறைச்சாலை பொது தானே?" என்று கூறி முடித்தாள் அவன் தாய்.

அவனைக் கூட்டிக் கொண்டு காவலர் வெளியே சென்றார்.

தங்கள் திட்டம் தோல்வி அடைந்ததில் இருவருக்கும் ஏமாற்றம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்காலத்தில் நிஜத்தைப் புரிந்து கொண்டு நடந்தால் எதிர்காலம் வசமாகி விடும்.

– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் இராஜயோகம்

கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் இராஜயோகம் என்பது சோதிடக் கருத்து.

ஆம், ஒரு ஜாதகக்காரனுக்கு கெட்ட கிரகம் கெட்டுப்போக வேண்டும். அப்போதுதான் அந்த ஜாதகக்காரனால் இராஜயோகத்தை அனுபவிக்க முடியும்.

மாறாக கெட்ட கிரகம் வலிமை பெற்றிருந்தால், அது தனது கெடுதியைக் கனதியாகச் செய்து கொள்ளும்.

எனவே சம்பந்தப்பட்ட ஜாதகன் கடும் துன்பத்தையும் கஷ்டத்தையும் அனுபவிக்க வேண்டியதாக நிலைமை இருக்கும்.

இதை நாம் கூறும்போது, தனித்து கெட்ட கிரகம் மட்டும் கெட்டுப் போக வேண்டுமா? அல்லது கெட்டவர்களும் கெட்டால் நல்லதா? என்று நீங்கள் முணுமுணுப்பது தெரிகிறது.

உண்மை. கெடுதியைத் தரக்கூடிய எதுவும் கெட்டுப்போக வேண்டும். அல்லது வலிமை குறைய வேண்டும்.

உதாரணத்துக்கு கொரோனாத் தொற்றுக்குரிய வைரஸ் வலிமை பெற்றதால், இந்த உலகம் ஆடிப் போனது. இலட்சக்கணக்கான மக்கள் உயிரிழந்து போயினர்.

எனவே கெட்ட கிருமிகள் வலுக்குறைய வேண்டும். இதை நாம் கூறும்போது, இந்தக் கருத்து எங்கும் எதற்கும் பொருந்தும் என்பது உணர்தற்குரியது.

ஆம், இப்போது நாட்டில் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரம் சூடுபிடித்துள்ளது. வாக்குறுதிகள் தாராளமாகத் தரப்படுகின்றன. அதிலும் சிலர் செய்கின்ற பிரசாரங்கள் இது என்ன? என்று மக்களைத் திகைக்க வைக்கிறது.

உதாரணத்துக்கு, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற நாமல் ராஜபக்ஷ தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் உரையாற்றும் போது; அரகலப் போராட்டத்தின் முதன்மையான சூத்திரதாரிகளில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முக்கியமானவர் எனக் கூறியுள்ளார்.

இவ்வாறு நாமல் ராஜபக்ஷ கூறியமை நாட்டு மக்களிடம் பெரும் அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

அதாவது, அரகலப் போராட்டத்தின்போது ராஜபக்ஷ தரப்பைப் பாதுகாத்தவர் ரணில் விக்கிரமசிங்க.

அன்று ரணில் விக்கிரமசிங்க தவிர்ந்த வேறு எவர் ஜனாதிபதியாகப் பதவியேற்றிருந்தாலும் ராஜபக்ஷ தரப்பு இலங்கைக்கு மீள வந்திருக்க முடியாது.

தவிர, ராஜபக்ஷக்களின் சொத்துக்கள் அரச உடைமையாக்கப்பட்டிருக்கும்.

ஆனால் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்றதன் காரணமாக, ராஜபக்ஷ குடும்பம் மீண்டும் நாடு திரும்பி, அரசியல் நீரோட்டத்தில் இணைய முடிந்தது.

ஆம், ராஜபக்ஷக்களைக் காப்பாற்றுவதற்காக அரகலப் போராட்டத்தை மையப்படுத்தி, அதில் ஈடுபட்ட இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டன. இவற்றை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மும்முரமாக நின்று செய்வித்தார்.

ஆனால் இப்போது அரகலப் போராட்டத்தின் முதன்மைச் சூத்திரதாரி ரணில் விக்கிரமசிங்க என நாமல் ராஜபக்ஷ சொல்கிறார் என்றால், அதன் நோக்கம் என்ன என்பது புரிகிறது.

ஆக, எதுஎவ்வாறாயினும் அரசியலில் உள்ள கெட்டவர்கள் கெட்டுப்போக வேண்டும். அப்போதுதான் நாட்டுக்கு நன்மை கிட்டும்.

# தமிழர்களுக்கு எதிரான அரசாங்கமே கடந்த காலங்களில் ஆட்சி செய்தன

## தேர்தல் பிரசாரத்தில் அநுரகுமார

*(கொழும்பு)*

நாட்டிலுள்ள அனைத்து இனங்களும் நல்லிணக்கத்துடன் வாழக்கூடிய வகையிலான புதிய அரசியலமைப்புச் சட்டமொன்று தமது அரசாங்கத்தில் உருவாக்கப்படுமென தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

அக்குறணையில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அநுரகுமார திஸாநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, நாட்டின் கடந்த கால வரலாற்றில் ஒன்றுக்கொன்று எதிரான அரசாங்கங்களே மாறி மாறி ஆட்சி அமைத்திருந்தன.

2005 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரங்களின் போது வடக்கு மாகாணத்திலுள்ள தமிழ் மக்களுக்கு எதிரான கோசங்களையே பிரதானமாக முன்வைத்தனர்.

தமிழருக்கு எதிரான அரசாங்கமாகவே தெற்கு அரசியல்வாதிகள் செயற்பட்டனர். அவ்வாறான அரசாங்கமே கடந்த காலத்தில் ஆட்சி பீடங்கள் ஏற்றியிருந்தன. 2019ஆம் ஆண்டு முஸ்லிம்களுக்கு எதிரான அரசாங்கம் அமைக்கப்பட்டது.

அளுத்கம, திகன ஆகிய சம்பவங்கள் அரங்கேற்றப்பட்டன. இதன் பின்னர் ஏப்ரல் 21 ஆம் திகதி ஈஸ்டர் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த காலத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரச்சாரம் முழுக்க முழுக்க முஸ்லீம் மக்களுக்கு எதிரானதாகவே அமைந்தது.

நாட்டிலுள்ள சிறுபான்மையினருக்கு எதிராக அரசாங்கத்தை அமைப்பதன் மூலம் ஒற்றுமையை உருவாக்க முடியாது. எனவே நாட்டில் முதன்முறையாக சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் அபிலாசைகளை வழங்கக்கூடிய ஐக்கிய அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட வேண்டும்.

சஜித்திடம் தற்போது சென்றவர்களில் பலர் எமது வாசற் கதவுகளையும் தட்டியிருந்தனர்.

ஆனால் நாங்கள் அவர்களை உள்ளே வருவதற்கு அனுமதிக்கவில்லை. எங்களுக்கு அவர்கள் எவரும் தேவையில்லை. எங்களிடம் கொள்கை ரீதியான அரசியல் உள்ளது. எங்கள் மேடையில் இருப்பவர்கள் அனைவரும் இந்த நாட்டை நேசிப்பவர்கள், ஒரு அரசாங்கத்தில் அமைச்சர்களின் எண்ணிக்கை எப்போதும் மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்க வேண்டும் என்றார். (ந-7)

## குரங்கம்மையைத் தடுக்க சுகாதார அமைச்சு தீவிரம்

*(கொழும்பு)*

உலகளவில் குரங்கம்மை நோய் பரவி வருவதைக் கருத்தில் கொண்டு கட்டுநாயக்க விமான நிலையம் உட்பட நாடு முழுவதும் தொற்று தடுப்புச் செயல்முறை பலப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

தொற்று நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டால், குறித்த நோயாளர்களுக்காகக் கொழும்பு தொற்று நோய் நிறுவகத்தில் தனிமைப்படுத்தல் மற்றும் சிகிச்சை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

மேலும், கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் குரங்கம்மை காய்ச்சல் நோயாளிகளைக் கண்டறிவதற்கான ஆய்வக வசதிகளை மேற்கொண்டுள்ளது.

நோய்க்கான சிகிச்சையளிப்புத் தொடர்பாகத் தேவையான வழிகாட்டுதல்கள் மற்றும் அது தொடர்பான அறிவுறுத்தல்கள் அடங்கிய சுற்றறிக்கையும் அனைத்து சுகாதார நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. (ந-7)

## செல்லப்பா சுவாமிகளின் மாதாந்த குருபூஜை தினம்

செல்லப்பா சுவாமிகளின் மாதாந்த குருபூஜை நிகழ்வு இன்று நல்லூர் வீதியில் அமைந்துள்ள சுவாமியின் நினைவாலயத்தில் நடைபெறவுள்ளது.

காலை திருமுறை, நற்சிந்தனை பாடல்கள் இசைக்கப்பட்டு 11மணிக்கு சிவயோக சுவாமிகள் நூலின் நயப்புரை இடம்பெறுதலைத் தொடர்ந்து, சுவாமிகளின் குரு பூஜை நடைபெறும் என நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் அறியத்தந்துள்ளனர். (ந-7)

## இலவசக் கருத்தரங்கு

*(கரவெட்டி)*

யாழ்.விக்னேஸ்வரக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் வடமராட்சிக் கல்வி வலயத்திற்கு உட்பட்ட கல்விப் பொதுத் தராதர உயர்தர வர்த்தகப் பிரிவு மாணவர்களுக்கான கணக்கீடு பாடத்திற்கான விசேட இலவசக் கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை (23.08.2024) காலை 08 மணி முதல் கரவெட்டியிலுள்ள மேற்படி கல்லூரியின் சிவபாதசுந்தரம் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புக்கள் பீடத்தின் பீடாதிபதி சிரேஷ்ட பேராசிரியர் தி.வேல்நம்பி வளவாளராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

குறித்தக் கருத்தரங்கில் வடமராட்சிக் கல்வி வலயத்திற்குட்பட்ட அனைத்து உயர்தர வர்த்தகப் பிரிவு மாணவர்களையும் கலந்து பயன் பெறுமாறு கருத்தரங்கு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ந-7)

## சட்டவிரோத மண் கடத்தல் பொலிஸ் துப்பாக்கிச் சூடு

*(கிளிநொச்சி)*

கிளிநொச்சி - இராமநாதபுரம், மாயனூர் பகுதியில் நேற்று முன்தினம் சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்ற உழவு இயந்திரம் மீது பொலிஸார் துப்பாக்கி பிரயோகம் நடத்தியுள்ளனர்.

குறித்த உழவு இயந்திரத்தை மாயனூர் பகுதியில் கடமையிலிருந்த பொலிஸார் நிறுத்துமாறு சமிக்ஞை வழங்கிய போதும், குறித்த சமிக்ஞையை பொருட்படுத்தாது பயணித்த அந்த உழவு இயந்திரம் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டுள்ளதோடு,

உழவு இயந்திரத்தின் சாரதி உள்ளிட்ட இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ந-7)

## நுகர்வுப் பொருட்களின் விலைகள் குறைப்பு

*(கொழும்பு)*

அத்தியாவசிய நுகர்வுப் பொருட்களின் விலைகளைக் குறைப்பதற்கு சதொச நிறுவனம் தீர்மானித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து லங்கா சதொச விற்பனை நிலையங்களிலும் நுகர்வோர் இந்தப் பொருட்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி ரின்மீன், செத்தல் மிளகாய், பாசிப்பயறு, வெங்காயம், நெத்தலி, கடலை, சம்பா அரிசி, வெள்ளை சீனி ஆகியவற்றின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தோற்றுக் கொண்டிருக்கும் அரசியல் தீர்வு பேச்சுவார்த்தைகளும் தோற்காத அரசியல் தீர்வு யோசனைகளும்

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

05

மீண்டும் (1981இல்) தமிழருக்கு எதிரான கலவரங்கள் இடம் பெற்றன. தமிழ் இளைஞர்களுக்கு தஞ்சம் அளிக்கும்படி தமிழ்நாட்டில் 20 அரசியல் கட்சிகள் பிரதமர் இந்திராவை வேண்டிக்கொண்டன. தமிழருக்கு எதிரான வன்முறை குறித்து இந்தியா கவனம் செலுத்தத் தொடங்கியது. 1977 முதல் 1983 வரை தமிழ் இயக்கங்களின் வலு மேலோங்கியது.

1983 ஆடிக் கலவரத்தை அடுத்து தமிழ்நாடு கொந்தளித்தது. 'இந்திய மத்தியஅரசு இலங்கைத் தமிழர் பிரச்சினையை வெறுமனே ஒரு தமிழ்நாட்டுப் பிரச்சினையாகக் கொள்ளாது தேசியப் பிரச்சினையாகக் கொள்ளுகிறது' என்று பிரதமர் இந்திரா முழங்கினார்.

கலவரம் மூண்டு இரண்டே இரண்டு நாட்களுள் அவர் ஜெயவர்த்தனாவை தொலைபேசியில் அழைத்து விசாரித்தார். 'ஓர் அதிகார பூர்வமான பிரதிநிதியை இலங்கைக்கு அனுப்பிவையுங்கள் அவர் நேரில் நிலைமையை அவதானித்து, நாடுதிரும்பி உங்களுக்கு அறிவிப்பார் என்று ஜெயவர்த்தனா பிரதமர் இந்திராவிடம் தெரிவிக்க நேர்ந்தது' என்று கே.எம்.டி சில்வா குறிப்பிட்டுள்ளார். யூலை 29ஆம் திகதி வெளியுறவு அமைச்சர் நரசிம்மராவ் இலங்கை வந்தபொழுதும் கூட கொழும்பு எரிந்துகொண்டு தான் இருந்தது.

பிரதமர் இந்திராவினால் இணக்கநடுவராக அமர்த்தப்பட்ட பார்த்தசாரதிக்கு இடப்பட்ட பணிகள்: பிரச்சினையைப் பேசித்தீர்ப்பதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தல். இலங்கை அரசுக்கும் தமிழ்க் கட்சிகளுக்கும் இடையே இடைநடுவராகச் செயற்படல். புதிய அதிகாரப் பரவலாக்க முன் மொழிவுகளை முன்வைத்தல்.

முதற்கட்ட பேச்சுவார்த்தைகள் 1983ஆம் ஆண்டு ஆவணி முதல் கார்த்திகை வரை நீடித்தன. பிரதேச சபைகளை அடிப்படையாகக் கொண்டு இரு தரப்புகளும் ஒரு திட்டத்தை ஏற்றுக் கொண்டன. அது பின்னிணைப்பு-சி எனப் பட்டது.

1984 ஜனவரியில், இனவாதப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக ஜெயவர்த்தன அரசாங்கம் அனைத்துக் கட்சி மாநாட்டைக் கூட்டியது. பங்கேற்பாளர்களில் UNP, SLFP, TULF மற்றும் ஐந்து சிறிய குழுக்களும் அடங்குவர். விவாதிக்கப்பட்ட முக்கிய பிரச்சினை அதிகாரப்பகிர்வு ஆகும்.

மாவட்ட சபைகளை உருவாக்குதல் மற்றும் உள்ளூராட்சியில் பிற மாற்றங்கள் மூலம் நாட்டின் மாவட்டங்களுக்கு சுயாட்சி வழங்குவதை அரசாங்கம் முன்மொழிந்தது.

மேலும், அரசாங்கம் பாராளுமன்றத்தின் இரண்டாவது சபையை நிறுவ முன்மொழிந்தது. இரண்டாவது சபையான அரச சபையின் உறுப்பினர்களில் மாவட்ட சபைகளின் தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்கள் இருப்பார்கள் என்றும் மற்றும் அவை சட்டவாக்கம் மற்றும் ஆலோசனைப் பாத்திரங்களை வகிக்கும் என்றும் கூறப்பட்டது.

இந்த முன்மொழிவுகளை தமிழ்த் தரப்பினர் நிராகரித்தனர். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு இடையில் விசேட இணைப்பு ஏற்படுத்துவதை அம் முன்மொழிவுகள் கொண்டிருக்காததும் ஒரு காரணமாகும்.

இதனால் எந்த சமரசமும் எட்டப்படவில்லை. மாநாடு டிசம்பர் 21, 1984 இல் கலைந்தது. 1985 இல் திட்டமிட்டபடி மீண்டும் தொடங்கப்படவில்லை. சர்வகட்சி மாநாட்டில் அதிகாரப்பகிர்வு தொடர்பில் உடன்பாடு ஏற்பட்டிருந்தாலும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், மகாஜன எக்சத் பெரமுனவும் பேச்சுவார்த்தையில் இருந்து விலகியதால், அது நடைமுறைப்படுத்தப்பட்டிருக்க வாய்ப்பில்லை. இந்த முன்மொழிவுகள், அரசியல்ரீதியாக செயற்படும் பௌத்த பிக்குகள் மற்றும் போர்க்குணமிக்க சிங்களக் குழுக்களால் கண்டனம் செய்யப்பட்டன.

### திம்புப் பேச்சுவார்த்தைகள்- 1985

திம்புப் பேச்சுவார்த்தைகள் இந்திய அரசின் அனுசரணையுடன் இலங்கை அரசுக்கும் தமிழீழ போராட்டத்துடன் தொடர்புடைய ஈழ விடுதலை இயக்கங்கள் மற்றும் அரசியல் கட்சிகளுக்குமிடையே ஈழத்தமிழர்கள் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்குடன் பூட்டான் நாட்டின் தலைநகரான திம்புவில் மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தைகளை குறிக்கும். இப்பேச்சுவார்த்தைகள் 1985ஆம் ஆண்டு ஜூலை 8இல் ஆரம்பமாகியது.

இப்பேச்சு வார்த்தையில் தமிழர் சார்பாக பங்கு பற்றிய ஈழத் தேசிய விடுதலை முன்னணியில் தமிழீழ விடுதலைப் புலிகளும் நான்கு உறுப்பு இயக்கங்களில் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

திம்புப் பேச்சுவார்த்தைகளின் போது தமிழ் அரசியல் கட்சிகள் முன்வைத்த கோரிக்கைகள்:

1. தமிழ் மக்களின் பாதுகாப்பு மற்றும் உரிமைகள் உறுதிப்படுத்தப்படும் வகையில் அவர்களை ஓர் தேசிய இனமாக ஏற்றுக்கொள்ளல்.

2. தமிழர் மரபு வழித் தாயகக் கோட்பாட்டை ஏற்றுக் கொள்ளல்.

3. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொள்ளல்.

4. இலங்கையைத் தமது தாய் நாடாக ஏற்றுக் கொள்ளும் அனைவரது பிரஜா உரிமையை ஏற்றுக் கொள்ளல்.

5. தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளை ஏற்றுக்கொள்ளல்.

திம்புப் பேச்சுவார்த்தைகளில் பங்கு பற்றிய தமிழ் ஆயுதக் குழுவினர் மேற்படி பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றிய போதிலும் திம்புக் கொள்கைகள் பற்றி ஆழமானதும் தீவிரமானதுமான கலந்துரையாடலை அவர்கள் மத்தியில் முன்கூட்டியே ஒழுங்குபடுத்தவில்லை.

பேச்சுவார்த்தைக்குத் தேவையான நிகழ்ச்சி நிரலை மாத்திரம் அவர்கள் சமர்ப்பித்தனர். இந் நிகழ்ச்சி நிரலின் யோசனைகளை ஆழமாகக் கவனத்தில் எடுத்துக் கொள்ள அன்றைய ஜே.ஆர். ஜெயவர்தனவின் தலைமையின் கீழான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் தயாராக இருக்கவில்லை.

ஐக்கிய அரசின் கீழ் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்ளல், தமிழ் மக்களை ஓர் தேசிய இனமாக அங்கீகரித்தல் மற்றும் தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களை மரபுவழித் தாயகமாக ஏற்றுக் கொள்ளல் போன்ற பிரேரணைகள் இப்பேச்சுவார்த்தைகளுக்கு அடிப்படையாக அமைந்தன. இவை திம்பு யோசனைகள் என பகிரங்கப் படுத்தப்பட்டன.

திம்பு பேச்சுவார்த்தை சாதகமாக அமைய வேண்டும் என்ற எண்ணம் இலங்கை அரசாங்கத் தரப்பை விட, தமிழர் தரப்பை விட, இந்தியாவுக்கே அதிகமாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இப்படியாகச் சிக்கலடைந்த திம்புப் பேச்சுவார்த்தைகள், போர் நிறுத்தத்தை மீறி படைகள் திருகோணமலையிலும் வவுனியாவிலும் நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து முறிவடைந்தன. பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் பாலசிங்கம் இந்தியாவிலிருந்து நாடு கடத்தப்பட்டார்.

இதனால் தலைவர் பிரபாகரனுக்கும் இந்திய அரசுக்கும் இடையில் பாரிய முரண்பாடும் இடைவெளியும் ஏற்பட்டது. ஆனால் இந்தியா பற்றிய தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை தலைவர் பிரபாகரன் பின்வருமாறு கூறியிருக்கிறார். எமக்கு இந்தியாவின் உதவியும் நல்லெண்ணமும் அவசியம். அதே வேளையில் இந்தியா தனது தீர்வைத் தமிழீழ மக்கள் மீது திணிப்பதை நாம் விரும்பவில்லை. தங்களது எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் முழு உரிமையும் எமது மக்களுக்கு உண்டு என்று.

### வட்டமேசை மாநாடு 1986

1986இல் ஜெயவர்த்தனா ஒரு வட்டமேசை மாநாட்டைக் கூட்டினார். மாகாண சபைகளை அடிப்படையாக் கொண்டு அதிகாரப் பரவலாக்க யோசனையை அவர் முன்வைத்தார். இலங்கைச் சுதந்திரக் கட்சி அதில் கலந்துகொள்ளவில்லை. எனினும் தலைவி சிறிமாவோ தனிப்பட்ட முறையில் ஜெயவர்த்தனாவுடன் பேச இணங்கினார். இலங்கை அரசும் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னனியும் 3 மாதங்கள் கலந்துரையாடியதன் பெறுபேறாக ஒரு மாகாண சபை வரைவு அரும்பியது. மொத்தம் 50 பக்கங்கள் கொண்ட அதிகாரபூர்வமான ஆவணங்களைப் பார்வையிட்ட கே.எம்.டி சில்வா, அவற்றில் உள்ளடங்கிய கூறுகளைச் சுட்டிக்காட்டியுள்ளார்:அவை யாப்புத் திருத்த வரைவு, மாகாண சபை வரைவு, மத்தியநிரல்,பொது நிரல், மாகாண நிரல், சட்டமும் ஒழுங்கும், காணியும் குடியேற்றமும், கல்வி.

1986 கார்த்திகை மாதம் பெங்களூரில் ராஜீவ் காந்தியும், ஜெயவர்த்தனாவும் சந்தித்து மேற்படி முன்மொழிவுகளை ஆராய்ந்தனர். வட, கிழக்கு மாகாணங்களின் இணைப்பு ஒன்றே தீர்க்கப்படாத சர்ச்சையாய் எஞ்சியது.

### இந்திய, இலங்கை ஒப்பந்தம்- 1987

இந்திய, இலங்கை ஒப்பந்தம், 1987 அப்போதைய இந்திய பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாக்கும் இடையே ஜூலை 29, 1987 ஆம் ஆண்டு ஈழத்தமிழர்களின் பிரச்சினைகளை தீர்க்கும் நோக்குடன் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தம் ஆகும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தேர்தல்கள்...

நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்று கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தேர்தல் தொடர்பாக எடுக்க வேண்டிய அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து தேர்தல்கள் ஆணைக்குழு கூடி, தீர்மானம் எடுக்கும்.

மேலும், அரசியல் செல்வாக்குக் காரணமாக தேர்தல்கள் ஆணைக்குழு தனது கடமைகளை நிறைவேற்றத் தவறியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளுக்கு பதிலளித்த ரத்நாயக்க, தற்போதைய சூழ்நிலையில் தேர்தலை நடத்துவதற்காக மேற்கொள்ள வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் தேர்தல்கள் ஆணைக்குழு இயன்ற வரை முயற்சித்தது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு தொடர்ந்தும் முயற்சித்து வருகின்றது.

தேர்தலுக்கு நிதி ஒதுக்கப்படாததன் காரணமாகவே இந்தப் பிரச்சினை எழுந்துள்ளது. உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பானது தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும்ஏனைய சுயாதீன ஆணைக்குழுக்களின் அதிகாரங்களை மேலும் வலுப்படுத்தும்" என்றார். (ந-7)

## அதிகாரப்...

இலங்கையின் மனித உரிமை நிலைவரம் குறித்த ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையாளரின் முழுமையான அறிக்கையிலேயே இந்த வேண்டுகோள் இடம் பெற்றுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தேர்தல்களையடுத்துப் புதிதாகத் தெரிவு செய்யப்படும் ஜனாதிபதி ஒரு அவசர விடயமாக இலங்கை நாட்டுக்கென அனைவரையும் அரவணைக்கும் தேசிய நோக்கினை முன்னெடுக்க வேண்டும்.

அத்தோடு முரண்பாடுகளிற்கான மூலகாரணங்களைக் கவனத்தில் எடுத்து ஜனநாயகத்தைப் பலப்படுத்துவதற்கும், அரசியல் அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பதற்கும், பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் என்பனவற்றை மேம்படுத்துவதற்கும் தேவையான அடிப்படையான அரசியல் யாப்பு மற்றும் நிறுவனரீதியான சீர்திருத்தங்களை முன்னெடுக்கவேண்டும்.

இலங்கை ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல் என்பவற்றை அண்மித்திருக்கும் நிலையில், 2022ஆம் ஆண்டில் எதிர்ப்புத் தெரிவித்த இலங்கையர்களின் அனைத்துத் தரப்புகளையும் பிரதிநிதித்துவம் செய்யும் பரந்துபட்ட தரப்பினரால் வேண்டுகோள் விடுக்கப்பட்ட நிலைமாற்றுகால நீதிக்காகத் தன்னை மீண்டும் அர்ப்பணித்துக்கொள்ளும் வாய்ப்பு இலங்கைக்கு கிடைத்திருக்கின்றது.

தேர்தல் காலத்திற்கு முன்னரும் தேர்தல் காலத்தின் போதும் அதன் பின்னரும் கருத்துச் சுதந்திரம், அமைப்புகளில் இணையும் சுதந்திரம் மற்றும் அமைதியாக ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம் என்பவற்றிற்கான உரிமைகளை முழுமையாகப் பாதுகாத்து, அவற்றிற்கு மதிப்பளிக்கவேண்டிய பொறுப்பினை அரசாங்கம் கொண்டுள்ளது.

போராட்டக்காரர்களிற்கு எதிரான மிதமிஞ்சிய அளவிலான அல்லது அநாவசியமான பலத்தைப் பிரயோகிப்பதை தவிர்த்துக்கொள்ளல், மதம், பாலினம் மற்றும் ஏனைய விடயங்களின் அடிப்படையிலான, பிரிவினைவாத மற்றும் பாரபட்சம் சார்ந்த சொல்லாடல்கள் மற்றும் நடைமுறைகளைத் தடுத்தல், தேர்தல் தொடர்பிலான மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களை தடுத்தல் ஆகியவற்றைச் செய்ய வேண்டும் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-7)

## தேர்தலை விட...

தார மீட்சியையே பெரிதாகக் கருதியதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மஹரகமையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் வைத்து ஜனாதிபதி இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

நான் நாட்டின் பொருளாதார அபிவிருத்தி குறித்தே சிந்தித்தேன். தேர்தலை நடத்தியிருந்தால் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டு வந்திருக்க முடியாது.

தற்போது ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுகிறது. மக்கள் தங்களது நிலைப்பாட்டை அதில் வெளிப்படுத்து வார்கள்.

அடுத்ததாக பொதுத் தேர்தலும் பின்னர் மாகாண சபை தேர்தல்களும் இடம்பெறும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். (ந-7)

## தொடர்...

நாத் நிகரிகா என்ற பெண் குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

தொடர் காய்ச்சல் காரணமாக குறித்த குழந்தைக்கு கடந்த 20ஆம் திகதி பனடோல் சிரப் கொடுக்கப்பட்டது. இருப்பினும் காய்ச்சல் மாறாத நிலையில், நேற்று முன்தினம் (21) யாழ். போதனா வைத்தியசாலையில் குழந்தை அனுமதிக்கப்பட்டது.

எனினும் குழந்தை அன்று இரவே சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.

இம்மரணம் தொடர்பில் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார். (ந-7,60)

## தமிழர்கள்...

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது,

"தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணாமல் இலங்கையால் ஓர் அங்குலமேனும் முன்னோக்கிச் செல்ல முடியாது. பொருளாதாரப் பிரச்சினை மட்டும் அல்ல, இனப் பிரச்சினையும் பாரதூரமான பிரச்சினையாகும்.

தேர்தல் நெருங்கும் வேளையில்தான் 13 பற்றி பேசப்படுகின்றது. இது நகைச்சுவையான செயற்பாடாகும். மாகாண சபை முறைமை அமுலில் உள்ளது. அதன்மூலம் பிரச்சினை தீர்ந்ததா? குறைந்தபட்சம் பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களாவது பகிரப்பட்டதா? இல்லை.

அவ்வாறு பொலிஸ், காணி அதிகாரங்களை வழங்கி இருந்தால்கூட ஓரளவு நம்பிக்கையை வென்றிருக்கலாம்.

ஜனாதிபதி வேட்பாளர்களில் இனப்பிரச்சினைக்கான தீர்வு எம்மிடம் மட்டுமே உள்ளது. நாம் சுயநிர்ணய உரிமையை ஏற்கின்றோம். 13 தீர்வாக அமையாது. 13 இற்கு அப்பால் சென்று தமது எதிர்காலத்தை தீர்மானிக்கும் உரிமை தமிழர்களுக்கு வழங்கப்படும். ஸ்கொட்லாந்து போன்று இங்கு தீர்வு வழங்கப்படும்" என்றார். (ந-7)

## உள்ளூராட்சி...

இவ்வாறு தேர்தலை நடத்தமுடியாது போனதையடுத்து தேர்தல் ஆணையாளரினால் உயர் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

குறித்த வழக்கின் தீர்ப்பானது நேற்றுக் காலை ஐவரடங்கிய உயர் நீதிமன்ற நீதிபதிகள் குழாமினால் அறிவிக்கப்பட்டது.

குறித்த தீர்ப்பில் நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மற்றும் தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்கள் 2023இல் உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்தாமல் விட்டமை அடிப்படை உரிமைகளை மீறியுள்ளதாக உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

முடிந்தளவு விரைவில் ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துமாறும் நேற்றைய தீர்ப்பில் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ந-7)

## ஜனாதிபதி...

ஜனாதிபதித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளராகக் களமிறங்கிய அய்ட்ரூஸ் முகமது இலியாஸ் (வயது-78) நேற்றுக் காலமானார்.

சுகவீனமுற்றிருந்த அவர் இரு நாட்களாக புத்தளம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்றுக் காலமானார்.

அவர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் யாழ்ப்பாண மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-7)


மஹஜன சம்பத
திகதி 2024.08.22
சீட்டிழுப்பு இலக்கம் 5573
B 7 6 6 0 5 8
அத சம்பத B 6 0 5 8
சீட்டிழுப்பு இலக்கம் 148
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.08.22
சீட்டிழுப்பு இலக்கம் - 1603
K 14 29 60 82 K
41657

மெகா பவர்
திகதி 22/08/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1921
I 23 28 44 51 76
05744

லக்ஸ் 7 VIP
திகதி 2024.08.22
சீட்டிழுப்பு இலக்கம் 0399
T 6 4 9 0 6 4 T

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3815
சீட்டிழுப்பு திகதி 22.08.2024
V 28 30 50 57
V 51793

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.08.22
சீட்டிழுப்பு இலக்கம் 0882
மகரம் 09 28 43 62 மகரம்
62423 13

உத்தியோகபூர்வ முடிவுகள்
22.08.2024 வெற்றி வாரம் 281 வர்ணம் மஞ்சள்
S 5 7 8 8 0 7
72198
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,547,952.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2547 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 22.08.2024 தினம் வியாழன்
01 19 33 65 I
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 53,345,501.60

சனிதா
திகதி 2024.08.22 வெற்றி வாரம் 4708 வர்ணம் சிவப்பு
06 43 47 60 X
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,000,000.00
58116

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4259 வர்ணம் கபிலம்
சீட்டிழுப்பு திகதி 2024.08.22 தினம் வியாழக்கிழமை
கன்னி
14 16 25 35
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,216,868.40
176795


ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Z 13 18 20 29 50
1723
சமெம்ஞ்சள்
22.08.2024 வியாழன்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 540,443,694.60

அத கோடிபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை
வெற்றி வாரம் : 2373
சீட்டிழுப்பு திகதி : 2024.08.22
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.60,726,454.40
10 26 41 73 H
342590


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் 240 நிலப்பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**




- 2 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- நன்னீர் ஊற்று, 20 அடிப் பாதை
- குடியிருப்புகள் சூழ உள்ள பகுதி
- நுச்சியம்பதி பிள்ளையார் கோவில் அருகாமையில்
- வட்டுக்கோட்டை Jaffna கல்லூரி 1 Km தூரம்
- காரைநகர் - யாழ்ப்பாணம் பிரதான காபெற் வீதி 500m தூரம், 784 வழி அரச, தனியார் பேருந்துகள் செல்லும் வழி
- 1 பரப்பின் விலை 150,000/= (ஒரு லட்சத்து ஐம்பதாயிரம்)
- பார்வையிடும் நேரம் : காலை 6.00 தொடக்கம் மாலை 6.00 மணி வரை

(1754)

**குரு**

**077 294 1521**
**077 288 0152**
**076 755 8606**


# எனது ஆதரவு...

நேந்திரனுக்குப் பூரண ஆதரவை வழங்குவதாகப் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் உறுதியளித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனை யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது இல்லத்தில் தமிழ்ப் பொது வேட்பாளர் அரியநேந்திரன் சந்தித்து நேற்று கலந்துரையாடினார்.

சந்திப்புக்கு பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த போதே பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரனால் குறித்த விடயம் அறிவிக்கப்பட்டது.

இலங்கை தமிழ் அரசுக் கட்சி என்ன முடிவை எப்போது எடுத்தாலும் தனிப்பட்ட முறையில் எனது ஆதரவு அரியநேந்திரனுக்கு அளிக்கப்படும். கட்சி என்ன முடிவை எடுக்கிறதோ, எடுக்கவில்லையோ அது எவ்வளவு தூரம் எம்மை தள்ளப்போகிறதோ என்பதை தமிழ் மக்கள் தீர்மானிப்பார்கள்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதியாக எனது ஆதரவு அரியநேந்திரனுக்கு அளிக்கப்படும். தமிழ் மக்கள் காத்திரமான ஒரு செய்தியை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வழங்க வேண்டும் என அழைப்பு விடுக்கிறேன் என்றார்.

இதன்போது கருத்து தெரிவித்த அரியநேந்திரன், தமிழர்களின் கோரிக்கைகளை உலகிற்கு அறிவிக்கவே தான் களமிறங்கும் சங்கு சின்னத்தை சிறீதரன் எம்பி சிபார்சு செய்தார்.

எதிர் வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்கள் தமக்கான குறியீடாக சங்கு சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார். (ந-7,33)


## பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை

நாவற்குழி, கைதடி மற்றும் சாவகச்சேரி ஆகிய இடங்களிற்குப் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை.

**758, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

**021 222 5102** (C-1029)



## மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய ராஜ கோபுர திருப்பணிக்கான கேள்வி விலைமனுக்கோரல்

மேற்படி துறையில் நிபுணத்துவம் பெற்ற அனுபவம் மிக்க ஸதபதிகளிடம் இருந்து விலை மனுக்கள் கோரப்படுகின்றன. எனவே இந்தத் துறையில் அனுபவம் மிக்கவர்கள் நேரடியாக ஆலயத்திற்கு வருகை தந்து கோபுரம் சம்பந்தமான விபரங்களைப் பெற்று 10 நாட்களுக்குள் அதற்குரிய விலை மனுக்களை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

செயலாளர்,
தர்மகர்த்தா சபை,
மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம். (C-1028)

## "குழந்தையின்மைக்கு சிறந்த தீர்வு"

## மாபெரும் இலவச கருவளச் சிகிச்சை முகாம்

- நீங்கள் நீண்டகாலமாக குழந்தைப் பேறிற்காக காத்திருக்கும் தம்பதியினரா?
- நீங்கள் நீண்ட காலமாக அடுத்த குழந்தையை எதிர்பார்த்து காத்திருக்கும் பெற்றோரா?

கருவளச் சிகிச்சையில் புகழ்பெற்ற வைத்திய நிபுணர்களை சந்தித்து ஆலோசனை பெறும் அரிய வாய்ப்பு உங்கள் அனைவருக்கும் கிடைக்கின்றது.

காலம் - 24.08.2024 சனிக்கிழமை
நேரம் - காலை 9.00 மணி - பிற்பகல் 2.00 மணி
இடம் - இணுவில் - மக்லோட் வைத்தியசாலை

ஏற்கனவே முற்பதிவு செய்தவர்களுடன் அனைவரும் பங்குபற்றலாம். கருவளச் சிகிச்சையானது உங்கள் வசதியைக் கருத்திற்க் கொண்டு இணுவில் மக்லோட் வைத்தியசாலையில் மட்டுமே நடைபெறுகின்றது.

அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாது பயன் பெற்றுக் கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.



கருவளச் சிகிச்சைக்கு வருவதற்கான பாதை வரைபடம்

**077 121 5005, 077 121 5003, 021 224 1569**
**மக்லோட் வைத்தியசாலை,**
**கே.கே.எஸ் வீதி, இணுவில்.**

## இந்தியன் விசா சேவைகள்

யாழ்ப்பாணம் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள்

அனைத்து நாடுகளுக்குமான விமானப் பயண சீட்டுக்களினை எம்மிடம் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**APEX TRAVELS**
0777 597 598, 076 3333 644
இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (280)

## மொத்தக் கொள்வனவு

400g அங்கர் பால்மா மற்றும் யோக்கட் மொத்தக் கொள்வனவுகளிற்கு எம்மை நாடுங்கள்



**Happy Super market**
உரும்பிராய்
**077 773 0900** (280)

## Care Giver - பராமரிப்பாளர்

கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma

கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - வீசா சேவைகள்.
(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)



CIMS College
49A, Chapel Street, Jaffna.
(C-1030)
College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322

## V2 VISA SERVICES
## கனடா

077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS

**விமான பயணச்சீட்டுக்கள்**

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை வீசா நீடிப்பு
(C-1030)

## வீடு வாடகைக்குண்டு

அருளம்பலம் வீதி, அரியாலையில் நவீன வசதிகளுடன் கூடிய மாடி வீட்டின் மேற்பகுதி மட்டும் வாடகைக்கு உண்டு. மேலதிக விபரங்களுக்கு,

**074 216 8717**
**074 223 6815**

இடைத்தரகர்கள் அனுமதி இல்லை. (1759)

## வேலையாட்கள் தேவை

நல்லூர் சூழலில் அமைந்துள்ள உணவகத்திற்கு

- சமையலாளர்
- உணவு பரிமாறுபவர்

உடன் தேவை.

தொடர்பு:
**076 404 0326** (C-1032)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.08.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.